# The Morning Star
*A Christian Publication*
# உதயதாரகை
*Established 1841*

*Subscription Rs.100/= (postage Separate)*

The Morning Star
CACM Head Office
Christian Theological Seminary
Maruthanarmadam
Chunnakam
Sri Lanka.

***Righteousness Exalteth A Nation. But Sin is a Reproach to any people.***

**Email: themorningstar1841@gmail.com | Vol. 185 | Jaffna | Friday, 24th July 2026 | No. 01 | Web: www.cacmchurch.com**


# "ஆழத்திற்குப் போவோம்"

தலைவர், அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன்



அன்புக்கும் பெரு மதிப்புக்குமுரிய வாசகர்களே! உங்கள் அனைவரையும் கிறிஸ்து இயேசுவின் இனிய நாமத்தில் அன்புடன் வாழ்த்துகின்றேன்.

கடந்த வருடம் எமது வருடாந்தப் பொதுப் பேரவைக் கூட்டத்தொடரின் கருப்பொருளாக அமைந்தது "நம்பிக்கையுடன் நல்ல விதைகளை நாட்டுவோம்" (Planting Good Seeds with Hope) என்பதாகும். இது அமெரிக்காவில் உள்ள "கிறிஸ்துவுக்குள் ஒன்றுபட்ட திருச்சபை" (UCC – United Church of Christ) இன் மகுட வாக்கியமாக அமைந்திருந்தது. இவ்வருடமும் அவர்கள் எடுத்துக்கொண்ட மகுட வாசகமான "ஆழத்துக்குப் போவோம்" (Go into the Deep) என்னும் வாசகத்தினையே நாமும் எமது மகுட வாசகமாக எடுத்துக் கொண்டுள்ளோம். இந்த மகுட வாசகமானது லூக்கா நற்செய்தி நூல் 5ம் அதிகாரம் 4ஆம் வசனத்தினை அடிப்படையாகக் கொண்டது.

இந்தச் சொற்றொடரானது கடந்த வருடத்தில் நாம் தெரிந்து கொண்ட "நம்பிக்கையுடன் நல்ல விதைகளை நாட்டுவோம்" என்ற சொற்றொடரின் வளர்ச்சியாகவே அமைந்து காணப்படுகின்றது. நம்பிக்கையுடன் நாட்டுகின்ற நல்ல விதைகள் முளைக்கின்றன. முளைக்கின்ற இவ்விதைகள் வளர்ந்து விருட்சங்களாகின்றன. இந்தச் சிறிய விதைகள் விருட்சங்களாவதற்கும் இவ்விருட்சங்களின் கிளைகள், இலைகள், பூக்கள், கனிகள் போன்றவை உறுதியாகவும் தரமாகவும் இருப்பதற்கும் இவ்விருட்சங்களின் வேர்கள் ஆழங்களுக்குப் போகவேண்டும்.

(15ஆம் பக்கம் பார்க்க)



**யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் புதிய ஆயராக திருத்தந்தை 14ஆம் லியோ அவர்களால் நியமனம் பெற்ற பேரருட்தந்தை**

## அன்ரன் ரஞ்சித் பிள்ளைநாயகம்

**அவர்கள்,**

**அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின்**

## வாழ்த்துக்கள்

# சீராகச் சிறப்பாக நடந்தேறிய CACMஇன் 14வது வருடாந்தப் பொதுப் பேரவைக் கூட்டத்தொடர்




"நம்பிக்கையுடன் நல்ல விதைகளை நாட்டுவோம்" என்ற கடந்த வருட கூட்டத்தொடரின் கருப்பொருளின் தொடர்ச்சியாகவும், நம்பிக்கையுடன் நாட்டப்பட்ட விதைகளின் அனைத்தும் ஆழங்களுக்குச் செல்லுகின்ற பொழுது, அவைகள் மிகுந்த கனிகளைத் தரும் என்ற நம்பிக்கைப் பாதையிலும் இந்தக் கூட்டம் பயணித்தது என்பது ஒரு சிறப்பான விடயமாகும்.

அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின், 14வது வருடாந்தப் பொதுப் பேரவைக் கூட்டத்தொடரானது **"ஆழத்திற்குப் போவோம்"** (லூக்கா 05:04) என்ற தலைப்பில் மே மாதம் 28 மற்றும் 29ம் திகதிகளில், மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரி, கேட்போர் கூடத்தில் மிகவும் சிறப்பாக எமது திருச்சபைத் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டம் தொடங்குவதற்கு முதல், கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் ஏழாவது அதிபராக. அருட்கலாநிதி. ராஜன் றொகான் அவர்களை, திருநிலைப்படுத்தும் வழிபாடு, காலை 8 மணிக்கு, எமது திருச்சபைத் தலைவரின் தலைமையில், கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தில் மிகவும் சிறப்பாக

(14ஆம் பக்கம் பார்க்க)

# தெல்லிப்பளை முன்னோர்களின் விசுவாசம் பெரியது

யாழ்ப்பாண கல்லூரி நம்பிக்கை நிதியத்தின் அறங்காவலர் குழுவின் அருட்பணி. ஜோன் அலன், ற்றேரி வூட், இன்பஜோதி நித்தியராஜ் மற்றும் அருட்பணி. எம். ஜூட் சுதர்சன் ஆகியோர் கொண்ட நான்கு பிரதிநிதிகள் ஜூன் மாதம் 14 முதல் 17 வரையிலான



காலப் பகுதிகளில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தனர். இதன்போது ஜூன் 14ஆம் திகதி தெல்லிப்பளை, அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையில் காலை வழிபாட்டில் பங்குபற்றியதுடன் வழிபாட்டு நிறைவில் திருச்சபை வளாகத்திலுள்ள அமெரிக்கன் மிசன் தொண்டர்களின் கல்லறைகளுக்குச்

(14ஆம் பக்கம் பார்க்க)

# கிறிஸ்தவ இறையியல் கல்லூரி ஏழாவது அதிபரைத் திருநிலைப்படுத்தும் வழிபாடு

ககிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் 7வது அதிபரின் திருநிலைப்படுத்தும் வழிபாடு 2026 ஜூன் 28 ஆம் திகதி மருதனார்மடம் கிறிஸ்த சேவ ஆசிரமத்தில் இறைபக்தியுடனும் சிறப்புடனும் நடைபெற்றது. அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை ஏற்பாடு செய்த இந்நிகழ்விற்கு அத்திருச்சபையின் தலைவரான அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் தலைமை தாங்கினார்.

கிறிஸ்த சேவ ஆசிரமம், கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. கல்லூரியின் ஆரம்ப காலங்களில் இறையியல் மாணவர்களுக்கான தங்குமிடமாக இவ்வாசிரமம் செயல்பட்டதுடன், மறைந்த தலைமை சேவகரான சாம் அல்பிரட் (சாம் அண்ணன்) மாணவர் நலன்துறைக் காப்பாளராகப் பணியாற்றினார்.



மேலும், கல்லூரியின் முதல் அதிபரான அருட்பணி ரி. எஸ். பிரேமராஜாவின் (1991) திருநிலைப்படுத்தும் வழிபாடும் இவ்வாசிரமத்திலேயே நடைபெற்றது. கல்லூரியின் நிறுவனரான பேராயர் டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் அந்நிகழ்வை வழிநடத்தியிருந்தார். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தொடர்பை நினைவுகூரும்

(06ஆம் பக்கம் பார்க்க)

# CACM அருட்பணியாளருக்கான ஞானஒடுக்கம்

அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் நான்கு பிராந்தியங்களுக்குமான முதலாவது வருடாந்த ஞானவொடுக்கமும் அருட்பணியாளர்களுக்கான கூட்டமும் 2026 ஜீன் மாதம் 29ம், 30ம் திகதிகளில் மருதனார்மடம் கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்திலும், கிறிஸ்தவ இறையியல் கல்லூரியிலும் நடைபெற்றன.

அருட்பணியாளர்களுக்கான ஞானவொடுக்கம் 29.06.2026, திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தில் நடைபெற்ற தூய நற்கருணை வழிபாட்டுடன் ஆரம்பமானது. இவ்வழிபாட்டினை நான்கு பிராந்தியங்களின் குருமுதல்வர்கள் இணைந்து நடாத்தினார்கள். இன்றைய நாளின் இறைசெய்தியினை அருட்கலாநிதி

(04ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் பேனாமுனையில்..

# தினம்தோறும் நம் பாரங்களை சுமக்கிற

### நமது இரட்சகரும் இறைவனுமான ஆண்டவருக்குத் துதி உண்டாவதாக

சுமக்க இயலாத பாரங்களைச் சுமந்துக் கொண்டு பாடுகள், இடையூறுகள் நிறைந்த பாதையிலே பத்தொன்பது ஆண்டுகளை நிறைவு செய்து இருபதாவது ஆண்டை நோக்கி நடந்து செல்ல எமது ஆண்டவர் துணை இருந்தார். இதில் நாம் பெருமிதம் அடைவதற்கு ஒன்றுமில்லை. நாம் நம்பிக்கையுடன் பற்றிக்கொண்ட ஆண்டவர் நமக்காகப் பாரங்களைச் சுமக்கிறார். அவரே எமது பெலன், துணை, ஆற்றல் அவருக்கே துதி உண்டாகட்டும்.

தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனத்திலிருந்து ஆளுமை, கட்டமைப்பு மற்றும் இறையியல் ரீதியாக தம்மை புதுப்பிக்க விரும்பிய அருட்பணியாளர்கள், இறைமக்கள் ஒன்றிணைந்து அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை என்ற பெயரில் புதிய திருச்சபையாகத் தம்மை திருநிலைப்படுத்திக் கொண்டனர். இது ஒர் நெடிய பயணம், பாரங்களும் பாடுகளும் நிறைந்தது. தொடர்ச்சியாக பல கொடிய அச்சுறுத்தல்கள், நீதிமன்ற வழக்குகள், பொது இடங்களில் அவமானப்படுத்தும் பிரச்சாரங்கள் எனப் பல துயரங்களைச் சந்தித்தோம்.

அத்தோடு, எமக்குள் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் உட்பிளவு களாகவும் துரோங்களாகவும் கசப்பான அனுபவத்தினை எமக்குக் கொடுத்தது. அதிகார வெறிகொண்டு மிக ஆக்ரோஷமாக செயல்பட்ட தலைமையினால் பலர் தமது பாரம்பரியத் திருச்சபையை விட்டு வெளியேறிய போதும், அவர்களில் அநேகர் எம்மோடு இணைந்துக் கொள்ளவில்லை, அவர்கள் ஒரு அங்கீகாரத்தை விரும்பி மெதடிஸ்ட், அங்கிலிகன் அல்லது பிரசித்திப் பெற்ற சுயாதீன சபைகளிலே இணைந்தனர். அவர்கள் இந்த புதிய திருச்சபை அமைப்பை ஒரு துச்சமாக எண்ணி, இந்த அமைப்பு காலத்தால் அழிந்துவிடும் என்றனர்.

ஆயினும் 19 வருடங்களாகத் தம்மோடு சேர்ந்து இறைவனை வழிபட, இறைபணியாற்ற விரும்பிய இறைமக்களோடு இந்த சவால் மிக்க விசுவாசபயணம் தொடர்கிறது. இன்று இலங்கை தேசத்தில் மட்டுமல்லாது உலக அரங்கில் பல அமைப்புக்கள், பல திருச்சபை மன்றுகள் எம்மோடு இணைந்து செயல்படுகின்றனர்.

நாம் விசுவாசத்தை விட, அதற்கு மேலாக எம்மோடு உடனிருந்து எம்மில் செயல்படுகின்ற எல்லா வல்லமையும் நிறைந்த ஆண்டவருக்கே துதி உண்டாவதாக.

**– ராறோ –**

# கிறிஸ்தவ ஒன்றிப்பு நற்செய்தியின் ஊற்று

கத்தோலிக்க திருச்சபையின் உட் சமய சிறப்பு பணி மன்றங்களில் முதல்வர்கள் மற்றும் அதிகாரப்பூர்வ பிரதிநிதிகளின் ஒன்றியம் இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து யாழ்ப்பாணத்தை நோக்கிச் சிறப்புத் திருத்தூதுப் பணியை மேற்கொண்டிருந்தனர். அதன் போது, கடந்த ஜூன் மாதம் 23ஆம் திகதி பிற்பகல் சுன்னாகம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரிக்கு விஜயம் செய்த அவர்கள் கிறிஸ்தவ ஒன்றிப்பில் காணப்படும் சவால்களையும் முன்னேற்றங்களையும் குறித்துக் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

இதன் போது கிறிஸ்தவ இறையியல் கல்லூரியில் முதல்வர் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் தோற்றத்தைக் குறித்துச் சுருக்கமாக கூறியதுடன் வடக்கு கிழக்கு மக்களுடைய யுத்த கால அனுபவங்களையும் கலாச்சார மற்றும் மீள் கட்டுமான வாழ்வியல் முறைகளையும் உள்ளடக்கியப் பனை மர இறையியல் மற்றும் புழுதி இறையியல் ஆகியவை பற்றி சுருக்கமாக அறிமுகம் செய்தார். மேலும் ”கிறிஸ்தவ ஒன்றிப்பு என்பது கிறிஸ்தவ நற்செய்தியின் ஊற்றாகவும் இயேசு



கிறிஸ்துவினால் திருநிலைப்படுத்தப்பட்டதாகவும் இருக்கின்றது. ஆகவே கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ அமைப்புகள் கிறிஸ்தவ ஒன்றிப்பை ஒரு போதும் அற்பமானதாக எண்ண முடியாது” எனக் கூறினார். பங்கு பற்றிய கத்தோலிக்க திருச்சபையின் உட்சமய குழுக்களின் பிரதிநிதிகளும் கலந்துரையாடலில் பங்கு பெற்றினர். அருட்பணி. ஜெரோம் அண்ணன், அருட்பணி. டானியல் ரஞ்சித், அருட்பணி. டானியல் ஜெயரூபன் ஆகியோரும் யாழ்ப்பாண சூழலில் கிறிஸ்தவ ஐக்கியம் பற்றிய தம் கருத்தியல்களை வெளிப்படுத்தினர்.

கிறிஸ்தவ இறையியல் கல்லூரியினரால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த ஐக்கிய தேநீர் விருந்தோடு நிகழ்வு நிறைவுற்றது.

*- RR*

# அருட்பணி. D. C. இரத்தினசிங்கம்
## 1957 –2002



அருட்பணி. டி. சி. இரத்தினசிங்கம் அவர்கள் தெல்லிப்பளையைச் சேர்ந்தவர். மலாயா (மலேசியா) நாட்டிலே 31.01.1927 இல் பிறந்த இவர், மூன்றாம் வகுப்புவரை மலாயா நாட்டிலேயே கல்வி கற்றார். ஏறத்தாழ 8 வருடங்கள் மலாயா நாட்டிலே வாழ்ந்த இவர், பெற்றோருடன் இலங்கைக்கு வந்து தழிழைக் கற்றுத் தன் படிப்பைத் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் தொடர்ந்தார். தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அமெரிக்கன் மிசன் தொண்டர்களினால் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பாடசாலை என்ற பெருமையுடன் திகழும் ஒரு புகழ்மிக்க பாடசாலை யாகும். தெல்லிப்பளை என்னும் கிராமம் அமெரிக்கன் மிசன் தொண்டர்களுடைய முதலாவது பணிக்களங்களிலே ஒன்று. அமெரிக்க தேசத்தில் இருந்து இங்கு வந்து பணியாற்றி, இங்கேயே மரித்த பல மிசன் தொண்டர்களுடைய கல்லறை தெல்லிப்பளைத் தேவாலயத்துக்கு அருகிலேயே உள்ளது. இவைகள் அனைத்தும் அருட்பணி. டி. சி. இரத்தினசிங்கம் அவர்களைச் சிறு வயதிலிருந்தே இறை பணியாளனாக உருவாக்குவதில் செல்வாக்குச் செலுத்திய ஆன்மீக அடையாளங்களாக விளங்குகின்றன.

இவருடைய தகப்பனார் திரு. றொபேர்ட் செல்லையா அவர்களும் தாயார் மேரி பாக்கியம் அவர்களும் தெல்லிப்பளையிலே சாட்சியுள்ள கிறிஸ்தவ குடும்பமாகத் திகழ்ந்தவர்கள். இக் குடும்பத்தில் அருட்பணி. இரத்தினசிங்கம் அவர்கள் 03 சகோதரிகளுடனும் 01 சதோதரனுடனும் 1927 இல் பிறந்தார் இவர்களில் தேவி ரீச்சர், லில்லி ரீச்சர் என்பவர்கள் தெல்லிப்பளைத் திருச்சபையின் பணிகளுக்கப்பாலே நற்செய்தி அறிவிப்புப் பணியிலும் சமூகப் பணியிலும் அதிகம் ஈடுபட்டவர்கள்.

S.S.C (Senior School Certificate) படித்துமுடிந்த அருட்பணி. டி. சி. இரத்தினசிங்கம் அவர்கள், இறையழைப்பினைக் காத்திரமாக உணர்ந்து, தன்னை இறைபணிக்கென அர்ப்பணித்து, இறையியல் பயிற்சிக்காக இந்தியாவிலுள்ள “திருமறையூர் இறையியல் கல்லூரிக்குச்” சென்றார். பின்னர் 1969 இல் இக்கல்லூரியும், “தரங்கம்பாடி இறையியல் பள்ளியும்”, “லூத்தரன் ஆர்காடு இறையியல் கல்லூரியும்” இணைந்து தமிழ்நாடு இறையியல் கல்லூரியென (TTS) உருவாக்கம் பெற்றது. திருமறையூர் இறையியல் கல்லூரியில் L.Th பட்டத்தைப் பெற்றுக்கொண்ட இவர், நாடு திரும்பி 1957ம் ஆண்டிலே இறைபணியினை உடுப்பிட்டித் திருச்சபையில் ஆரம்பித்தார். பின்னர் அச்சுவேலி, உடுவில், மூளாய், புங்குடுதீவு, நயினாதீவு, ஏழாலை தெற்கு ஆகிய இடங்களில் நல்லூழியம் புரிந்தார்.

இவர் தன்னுடைய வாழ்க்கைக்குத் துணையாகவும் இறைபணிக்குத் துணையாகவும் இருபாலையைச் சேர்ந்த லில்லி ஜெயமலர் அவர்களைத் தெரிந்துகொண்டார். இவர்களுடைய திருமணம் கொழும்பில் உள்ள ஜம்பெட்டா மெதடிஸ்த தேவாலயத்தில் நடைபெற்றது. இவர் 45 வருடங்கள் இறைபணி யாற்றினார். இவருடைய மனைவியார் (போதகரம்மா) அற்புதங்கள் செய்யும் வல்லமையுள்ளவர். இவர் தலைமேல் எண்ணெய் வைத்து செபிக்கும்போது பல அற்புதங்கள் நடைபெற்றன. பலர் குணமாகியுள்ளனர். மிகவும் எளிமையான வாழ்வை இவர்கள் வாழ்ந்தனர். போதகருக்கு துவிச்சக்கரவண்டிகூட ஓடத் தெரியாது. சைக்கிளிலோ மோட்டார் சைக்கிளிலோ பின்னால் இருப்பதைக்கூட இவர் விரும்புவதில்லை. கணவனும் மனைவியுமாக இருவரும் நடந்து சென்றே நல்லூழியம் புரிந்தனர். இவர்களுடைய வீட்டிலும் அத்தியாவசிய பொருட்களைத் தவிர ஆடம்பரமான பொருட்கள் எதனையும் காணமுடியாது.

1986ம் ஆண்டு இவருடைய சகோதரன் அமெரிக்காவில் இருந்து வருகின்றபோது கடிதம் மூலமாக “இரத்தினசிங்கம், நான் உனக்கு அமெரிக்காவில் இருந்து என்ன வாங்கிக் கொண்டு வரவேண்டும்” எனக் கேட்டார். அதற்கு இரத்தினசிங்கம் போதகர் “எனக்கு ஒரு குடை வாங்கிக் கொண்டு வா” என்று மறுமொழி அனுப்பினார். ஏன் என்று கேட்ட போது “எனக்கு எல்லாம் இருக்கு” என்று பதிலனுப்பினார். இவர்கள் வறுமையிலும் செம்மையாய் வாழ்ந்ததோடு அர்த்தமுள்ள இறைபணியைச் செய்தனர்.

இவருடைய சாட்சியுள்ள வாழ்வும், எளிமையான வாழ்க்கை முறையும், நகைச்சுவைக் கதைகளும், மிகவும் உயர்ந்த தொனியுடன்கூடிய கவர்ச்சிகரமான பிரசங்கங்களும் திருச்சபையின் மக்களுக்கு ஆன்மீகவுணவாக இருந்தன. இவர் தான் கொண்டிருந்த சிறப்பான தாலந்துகளான பாடும் திறமை, பாடல்களை இயற்றும் திறமை, வில்லுப்பாட்டுக்களினூடாகத் திருமறையின் சத்தியங்களை எடுத்து உரைக்கும் திறமை, கதாப்பிரசங்கங்கள் மூலமாக நற்செய்தி, பஞ்சொட்டிப்படம் போன்றவை மூலமாகக் கதை சொல்லும் திறமை என்பவற்றினைக் கொண்டு திருச்சபை பணியை மக்களுக்கு செய்துவந்தார்.

இவர் தன்னுடைய இறுதி நாட்களை ஏழாலை தெற்கில் கழித்தார். இறுதியில் 05.12.2014 இல் அங்கேயே மறுமைக்குள் பிரவேசித்தார். இவருடைய உடல் சுன்னாகம் ‘கொத்தியாலடி” இந்துமயானத்தில் அவருடைய விருப்பப்படியே எரிக்கப்பட்டுப் பின்னர் அதன் அஸ்தி, தெல்லப்பளையில் உள்ள அவர்களுடைய குடும்பக் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

தகவல் தொகுப்பு - **அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன்**

# IKC குழுவினருடைய இலங்கை வருகை

அமெரிக்காவில் உள்ள 50 மாநிலங்களில் “இன்டியானா கென்டக்கி” (Indiana Kentucky) என்பதும் ஒரு மாநிலமாகும். இம்மாநிலத்தில் உள்ள திருச்சபை “இன்டியானா கென்டக்கி கொன்பிரன்ஸ்” (Indiana Kentucky Conference) என அழைக்கப்படுகின்றது. எமது தாய்த் திருச்சபையாகவும் பங்காளித்துவத் திருச்சபையாகவும் காணப்படுகின்ற ஐக்கிய கிறிஸ்தவ திருச்சபையின் (United Church of Christ - UCC) ஒரு அங்கமாத விளங்குகின்ற IKC யினுடைய 05 பிரதிநிதிகள் அமெரிக்கன்




சிலோன் மிசன் திருச்சபையினுடைய பணிகளைப் பார்வையிடவும் உறவினை மேம்படுத்தவும் ஜனவரி 22ம் திகதி ஒரு குழுவாகவும் 24ம் திகதி இன்னுமொரு குழுவாகவும் இலங்கைக்கு வருகை தந்தனர். இக்குழுவில் IKC யினுடைய உப தலைவராகப் பணியாற்றும் அருட்பணியாளர் மொனிக்கா (Rev. Dr. Monica) IKC யினுடைய CACMக்கான இணைப்பாளராகப் பணியாற்றும் அருட்பணியாளர் சேரா (Rev. Sarah) அவருடைய கணவர் ஷோன் (Sean) மற்றும் இளம் அருட்பணியாளரான ஹெட்ரிக் (Rev. Kedric), அவருடைய துணைவியார் றொணி (Ronnii) ஆகியோர் அடங்கியிருந்தனர்.

இவர்கள் வவுனியாப் பிரதேசத்தில் நடைபெறுகின்ற அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் பணிக் களங்களான இராஜேந்திரன் குளம், பூவரசன்குளம், கல்மடு, மறவன்குளம் ஆகிய இடங்களையும் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் உள்ள பணிக்களங்களையும் பார்வையிட்டனர். குறிப்பாக சுதந்திரபுரத்தில் வன்னிப் பிராந்தியக் குருமாரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். அதன்பின் இவர்கள் அனைவரும் உடுவில், சத்தியபுரம், நவாலி ஆகிய திருச்சபைகளில் ஞாயிறு வழிபாடுகளில் கலந்து கொண்டதுடன் இறைசெய்திகளையும் பகிர்ந்து கொண்டனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## கள அனுபவ விஜயம்

### பிலிமத்தலாவை, இலங்கை இறையியல் கல்லூரி மாணவர்கள்

மருதனார்மடத்தில் அமைந்துள்ள இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரி (Christian Theological Seminary – CTS), பிலிமத்தலாவையில் அமைந்துள்ள Lanka Theological College - TCLஇன் நான்கு இறைப்பணிப் பயிற்சி மாணவர்களுக்காக 2026 மே 27 ஆம் தேதி மாலை முதல் ஜூன் 1 ஆம் தேதி காலை வரை நடைபெற்ற கள அனுபவப் பயணத்தை (Exposure Visit) வெற்றிகரமாக நடத்தியது.

கண்டி, கொழும்பு, காலி மற்றும் மாத்தறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இந்த மாணவர்கள், யாழ்ப்பாணத்திற்கு முதன்முறையாக வருகை தந்து, அதன் வரலாறு, பண்பாடு, கிறிஸ்தவ மரபுகள் மற்றும் போருக்குப் பிந்தைய சமூக யதார்த்தங்களை ஆழமாக அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர்.

வழிபாடு, களப்பயணங்கள், கலந்துரையாடல்கள், திருச்சபைத் தலைவர்கள் மற்றும் உள்ளூர் மக்களுடனான சந்திப்புகள் ஆகியவற்றின் மூலம் சூழல்சார் இறையியல் கல்வியை வழங்கும் நோக்கில் இந்நிகழ்ச்சி வடிவமைக்கப்பட்டது. இங்கு



தங்கியிருந்த காலத்தில், அவர்கள் மருதனார்மடம் கிறிஸ்த சேவ ஆசிரமம், நல்லூரிலுள்ள அங்கிலிக்கன் திருச்சபை, தெல்லிப்பளை அமெரிக்கன் மிசன் தொண்டகளின் கல்லறை தோட்டம் மற்றும் மிசன் இல்லம் ஆகியவற்றிற்கு விஜயம் செய்ததுடன், அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை யின் அளவெட்டி ஆலயத்தில்

(13ஆம் பக்கம் பார்க்க)

## 14வது பொதுப்பேரவை...

(01ஆம் பக்க தொடர்ச்சி)

ராஜன் றோகான் அவர்கள் பகிர்ந்து கொள்ள திருச்சபைத் தலைவருடைய இறையாசியுடன் வழிபாடு நிறைவு பெற்றது. பின்னர் தேநீர் இடைவேளையைத் தொடர்ந்து திருச்சபைத் தலைவர் அருட்பணி ஏ.எஸ். தேவகுணானந்தன் அவர்களால் ஞானவொடுக்கத்தின் முதல் அமர்வு “இலங்கையின் முரண்பாடுகள் நிறைந்த சூழலில் திருச்சபைகளுக்கும் குருமாருக்குமான அழைப்பு” என்னும் தலைப்பில் 10.30 தொடக்கம் 12.00 மணிவரை பெரியண்ணன் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த



“பல்லூடக விளக்கக் காட்சியானது” (Multi Media) குருநாகல் அங்கிலிக்கன் திருமண்டலப் பேராயர் நிஷாந்த பெர்ணான்டோ எழுதிய “திருப்பணிக்கான வழிகாட்டி” எனும் அசிய நூலை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டிருந்தது. இதில் திருச்சபையின் தலைவர் பின்வரும் விடயங்களை அருட்பணியாளர்கள் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை விளக்கமாகக் கூறினார்.

01. ஆன்மீக நபராக மாறுதல் 02. மனச்சாட்சிக்கு ஏற்ப செயற்படல், 03.அருட்பணியாளர்களுடைய வாழ்வு முறை, 04. திருப்பணியாளர்களுடைய ஆரோக்கியம், 05. திருப்பணியாளர் களுடைய உடை, 06. திருப்பணியாளர் களுடைய ஆரோக்கியம், 07.திருப்பணியாளர் களுடைய வார்த்தைப் பிரயோகங்கள்

அதன் பின் பரிந்து மன்றாடல் வேளையும் மதிய உணவு வேளையும் கடந்து இரண்டாவது அமர்வு 2.00 மணி தொடக்கம் 3.30 மணி வரை நடைபெற்றது. அதனையும் திருச்சபையின் தலைவர் அவர்களே “பிரசங்கபீடத்தில் தவிர்க்கப்பட வேண்டியவை” (Avoid from the Pulpit) எனும் தலைப்பின்கீழ் 30 நல்விடயங்களை “பல்லூடக விளக்கக் காட்சி”யின் மூலமாக எடுத்துரைத்தார். இது அருட்பணியாளர் களுக்குப் பயனுள்ளதாக அமைந்தது.

30.06.2026 செவ்வாய்கிழமை காலை 10.00 மணிக்கு அருட்ப்பணி யாளர்களுக்கான உத்தியோகபூர்வ கூட்டம் இறையியல் கல்லூரி கேட்போர் கூட்டத்தில் திருச்சபைத் தலைவருடைய நெறிப்படுத்தலிலும் அருட்பணியாளர் ஒன்றிய செயலாளர் அருட்பணி. ஆர். ஜோன் செல்வம் அவர்களுடைய ஒழுங்குபடுத்தலிலும் நடைபெற்றது. அதில் திருச்சபை சார்ந்த விடயங்கள் நடைமுறைச் சிக்கல்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டன. ஐக்கிய மதிய உணவுடன் நிறைவு பெற்றன.

*- AST*

## புதுப்பிக்கப்பட வேண்டிய இறையியல் கல்வி முறைமைகள்

இன்று உலக அளவில் முழு நேர குருத்துவ பணிக்காகவும் மற்றும் இறையியல் கல்லூரிகளில் இணைந்து தங்கி இருந்து முழுமையான கல்வியை தொடர்வதற்கும் ஆர்வம் கிறிஸ்தவ மக்க ளிடையே குறைந்து கொண்டு வருகின்றது. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் சுன்னாகவும் கிறிஸ்தவ இறையியல் கல்லூரி சவால் நிறைந்த சூழலில் தனது பயணத்தை எவ்வாறு தொடர்கின்றது என்னும் கேள்வி யாழ்ப்பாண கல்லூரியில் நம்பிக்கை நிதியத்தின் செயலாளர் அருட்பணி. ஜான் அலன் அவர்களினால் கேட்கப்பட்டது. யாழ்ப்பாணக் கல்லூரியின் நம்பிக்கை நிதியத்தின் அறங்காவலர் குழு ஜூன் மாதம் 15 ஆம் திகதி பிற்பகல் சுன்னாகம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரிக்கு வருகை தந்து கல்லூரியின் ஆளுநர் சபை உறுப்பினர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் உள்ளடங்கிய குழுவுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.



இதன் போது மேற்குறிப்பிட்ட கேள்வி கேட்கப்பட்டது, அதற்கு பதில் அளித்த கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் அதிபர் அருட்கலாநிதி ராஜன் றோகான் தனது



(11ஆம் பக்கம் பார்க்க)

# குறுக்கெழுத்துப் போட்டி

## போட்டி இல 006

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | | 03 | 04 | 05 |
| 06 | | ■ | 07 | த | |
| 08 | | 09 | ■ | | 10 |
| யோ | ■ | 11 ழ | 12 | ■ | |
| 13 | 14 | | | 15 | ■ |
| 16 | | | ■ | 17 | |

### இடமிருந்து வலம்

01. உலகின் முதலாவது தமிழ் பத்திரிகை
03. நட்சத்திரம்
05. கரம்
06. --துச்ண்டை (மாறியுள்ளது)
07. வகுப்பு (குழம்பியுள்ளது)
08. தோமாவை இப்படியும் அழைப்பர்
11. இயேசுவுக்கு குடிக்கக் கொடுத்தது (திரும்பியுள்ளது)
16. தடி (குழம்பியுள்ளது)
11. கட்டளை

### மேலிருந்து கீழ்

01. தொழில்
02. பொருத்தம்
03. மனைவி (ஒரு சொல் விடுபட்டுள்ளது)
04. தேர்
05. விதவை
09. முடிச்சு
10. ஆண் எதிர்ப்பால்
12. தலைமைக் குருக்களில் ஒருவர் (நடுச் சொல் விடுபட்டுள்ளது)
14. செல் (திரும்பியுள்ளது)
15. ஒரு விலங்கு (திரும்பியுள்ளது)

## அனுப்ப வேண்டிய முகவரி

உதயதாரகை
ஆசியா இல்லம்,
மருதனார்மடம், சுன்னாகம்.

மின்னஞ்சல் முகவரி
themorningstar1841@gmail.com
WhatsApp: 773 627 537

இறுதித் திகதி
30-08-2026

## போட்டி இல 005கான சரியான பதில்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 பி | லி | 02 ப் | 03 பி | 04 ய | ர் |
| ல | ■ | 05 க | ப் | பு | ■ |
| 06 தெ | ரு | க் | கூ | த் | து |
| ல் | ■ | பா | ■ | தை | ■ |
| 07 பி | ற் | சே | ர் | க் | 08 கை |
| யா | ■ | ம் | ■ | ■ | தி |

### இடமிருந்து வலம்

01. பவுல் அடிகளாரின் நிருபங்களில் (கடிதங்களில்) ஒன்று
05. கவர் கொம்பு
06. கலை வடிவங்களில் ஒன்று
07. நூல்களில் பின் இணைப்பு

### மேலிருந்து கீழ்

01. வேதத்தில் உள்ள ஏழு சபைகளுள் ஒன்று
02. சென்னையின் புறநகர்ப் பகுதிகளில் ஒன்று. சர்வதேச துடுப்பாட்ட மைதானம் இங்கு அமைந்துள்ளது. (குழம்பியுள்ளது)
03. கரங்களை இவ்வாறு செய்து வணக்கம் சொல்வர். (திரும்பியுள்ளது)
04. ஒங்கிய ...... கொண்டு இறைவன் விடுவித்தார். (குழம்பியுள்ளது)
08. சிறையில் இருப்பவர்.

### பங்குபற்றியவர்கள்

செல்வன். எஸ். கஸ்மிதா
செல்வன். ஆர். தீபன்
செல்வன். ஆர். சஞ்சய்
செல்வி. என். கனிகா
செல்வன். சாம் ஆதவன்
திரு. பி. எப்வேட்
செல்வி. எஸ். பானுஜா
செல்வன். ஜே. கஜேந்திரன்
திரு. என். கனிஷ்டன்
திருமதி. எஸ். முருகவேள்






குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டவர்
செல்வன். சாம் ஆதவன்

# காரைநகர் திருச்சபையின் 170வது ஆண்டு நிறைவும் புத்தாக்கம் பெற்ற ஆலய மீள் திறப்பும்



காரைநகர் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை தனது 170வது ஆண்டு விழாவினையும், புத்தாக்கம் பெற்ற ஆலய மீள் திறப்பு விழாவினையும் அண்மையில் கண்டது. காரைநகர் திருச்சபையின் அருட்பணியாளராகப் பணியாற்றிய அருட்பணி. சுதாசினி சுதாகரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற, இவ்விழா மிகவும் விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.

மேளதாள வாத்தியங்களோடு, சி.ஏ.சி.எம் அலுவலர்கள், யாழ் பிராந்திய அலுவலர்கள் மற்றும் அருட்பணியாளர்கள் மாலை மரியாதைகளோடு வரவேற்கப் பட்டனர். மீளுருவாக்கம் பெற்றுப் புதுப்பொலிவுடன் திகழும் ஆலயத்தின் அங்குரார்ப்பணப் பிரார்த்தனையை திருச்சபைத் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் ஏறெடுக்க, நினைவுக் கல்லினை சி.ஏ.சி.எம் பொருளாளர் கலாநிதி. என். கே. ரமேஸ்குமார் அவர்களுடன் சி.ஏ.சி.எம் செயலாளர் அருட்பணி. ஏ. பி. தேவதாஸ் அவர்களும் இணைந்து திரைநீக்கம் செய்து வைத்தனர். தொடர்ந்து திருச்சபைத் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன்



அவர்களுடன் திருச்சபையின் உபதலைவர் திரு. ஐ. அருள்றொகான் அவர்களும் இணைந்து பிதா, குமாரன் பரிசுத்த ஆவியரின் நாமத்தில் புனருத்தாரணம் செய்யப்பட்ட ஆலயத்தைத் திறந்து வைத்தனர். ஆலய அருட்பணியாளரான

(13ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை

## காரைநகர்

இந்து சமுத்திரத்தின் முத்து என்றழைக்கப்படும் இலங்கை எனும் அழகான தீவினைச் சுற்றி மொத்தமாக 124 சிறுசிறு தீவுகள் காணப்படுகின்றன. அனைத்து இயற்கை வளங்களையும் உள்ளடக்கிய இலங்கை எனும் தீவினை இச் சிறு தீவுகள் மெருகூட்டுகின்றன. அநேகமான தீவுகள் மக்கள் குடியேறாத தீவுகளாக இருந்தாலும் இலங்கையின் வடபகுதியில் உள்ள யாழ்ப்பாணத் தீபகற்பத்தினைச் சூழத் தலைமன்னார், நெடுந்தீவு, நயினாதீவு, ஊர்காவற்றுறை, காரைதீவு, புங்குடுதீவு, எழுவைதீவு அனலைதீவு, பருத்தித்தீவு, கச்சதீவு, மண்டைதீவு போன்ற தீவுகள் மக்கள் வசிக்கும் தீவுகளாகவும் வரலாற்றில் இடம் பெற்ற தீவுகளாகவும் காணப் படுகின்றன.

காரைதீவு என்பது தற்போது யாழ்ப்பாணத்தின் பிரதான நிலப்பரப்புடன் இணைக்கப்பட்டதன் பின்னர் "காரைநகர்" என்று அழைக்கப்படுகின்றது.



காரைதீவினைப் பிரதான நிலப்புடன் இணைக்கும் போது அது பொன்னாலை என்னும் கிராமத்துடன் இணையப் பெறுவதால் காரைதீவினைப் பிரதான நிலப்பரப்புடன் இணைக்கும் பாலம் "பொன்னாலை" பாலம் என்றழைக்கப்படுகின்றது.

போத்துக்கேயர் 1505ம் ஆண்டு இலங்கையில் காலடி எடுத்து வைத்து 1657 வரை 157 வருடங்கள் ஆட்சி புரிந்ததோடு உரோமன் கத்தோலிக்க சமயத்தையும் பரப்பியிருந்தனர். அவர்களைத் தொடர்ந்து 1657இல் இலங்கையினை தமது ஆட்சிக்குள் கொண்டு வந்த ஒல்லாந்தர் இலங்கையை 135 வருடங்கள் ஆட்சி புரிந்ததோடு ஒல்லாந்த சீர்திருத்த சமயத்தையும் பரப்பினார்கள். அவர்களைத் தொடர்ந்து இலங்கையில் காலடி எடுத்து வைத்த ஆங்கிலேயர் இலங்கைக்குள் நுழைந்ததும் சமய சுதந்திரத்தை அறிவித்தனர். இவர்களுடைய ஆட்சியின் நிறைவில் 1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றது.

போத்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோர் கத்தோலிக்க மற்றும் சீர்திருத்த சமயங்களைக்



காரைதீவுக்குள்ளே பரப்ப எடுத்துக் கொண்ட முயற்சிகள் அனைத்துமே தோல்வியிலே முடிந்தன. ஆனாலும் இடைப்பட்ட ஒரு காலப் பகுதியில்1641ம் ஆண்டு களபூமியில் 538 பேரும் வலந்தையில் 350 பேருமாக மொத்தம் 1388 பேர் கிறிஸ்தவர்களாக இருந்தனர். ஆனாலும் பிற்காலம் அனைவரும் பின்வாங்கிப் போய்விட்டனர். அவர்களால் காரைதீவுக்குள்ளே ஒரு திருச்சபையைக்கூட உருவாக்க முடியவில்லை. ஆங்கிலேயர் சமய சுதந்திரத்தை அறிவித்தபோது இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் இருந்து பல மிசன் சிங்கங்கள் இலங்கையை நோக்கிப் படையெடுக்கத் தொடங்கின. அவைகளில் அமெரிக்காவில் இருந்து வந்த "பிறதேசங்களுக்கு நற்செய்தியை அறிவிக்கும் அமெரிக்க சங்கம் எனப்படும் ABCFM – American Board of Commission for Foreign Mission எனும் சங்கத்தைச் சேர்ந்தவர்களே காரைதீவுக்குள் நற்செய்தியைப் பறைசாற்றி வெற்றி பெற்றவர்கள்.

1855ம் ஆண்டுக்கு முற்பட்ட சில ஆண்டுகளின் அமெரிக்கன் மிசன் தொண்டர்களால் நற்செய்திப் பணியினைச் செய்ய சிலர் அனுப்பப் பட்டனர். அங்கு அக்காலம் ஒரு விசுவாச சமூகம் உருவாக ஆரம்பித்தது. இவ்வேளையில் C. M. கொர்நெலியஸ் என்பவர் தென்னிந்தியாவில் இருந்து, நல்ல பெண் தேவையென்று யாழ்ப்பாணம் வந்து உடுவில் பெண்கள் பாடசாலையில் கல்வி கற்ற ஒரு பெண்ணைத் திருமணம் செய்து, சாட்சியான ஒரு குடும்பமாக உடுவிலில் வாழ்ந்து வந்தனர். இவர்களுடைய சாட்சியத்தைக் கண்ட லீவை ஸ்போல்டிங், மைரன் உவின்சிலோ ஆகியோர் இவர்களுக்கு திருமறையைக் கற்பித்து காரைதீவில் பணியை ஆரம்பிக்கும்படி அனுப்பி வைத்தனர். அதன்படி அவர்கள் 1855ம் ஆண்டில் காரைநகரில் ஒரு திருச்சபையை உருவாக்கினார்கள். காணி கொள்வனவு செய்யப்பட்டது. வழபாட்டுக்காக ஒரு கொட்டில் போடப்பட்டது.

1855ம் ஆண்டு அமெரிக்காவில் இருந்து வந்த அருட்கலாநிதி ரூபர்ஸ் அண்டர்சன் அவர்களால் C. M. கொர்நெலியஸ் அவர்கள் காரைநகர் கொட்டில் ஆலயத்தில் வைத்து குருவாக அபிஷேகம் பண்ணப் பட்டார். இவர் சாவகச்சேரியைச் சேர்ந்த T. P. ஹண்ட் அவர்களைத் தொடர்ந்து சுதேச குருவாக அபிஷேகம் பண்ணப்பட்டார். அருட்பணி. C. M. கொர்நெலியஸ் (Rev. C. M. Cornlius) காரைதீவுத் திருச்சபையின் உத்தியோகபூர்வமான முதலாவது குருவாக விளங்கு கின்றார். இந்த நிகழ்வுடன் காரைநகர் திருச்சபையின் வரலாறு ஆரம்பமாகின்றது.

ஒல்லாந்தர் காலம் களபூமியில் ஒரு ஆலயம் இருந்தது. அது காலப்போக்கில் அழிந்து போயிற்று. 1858ம் ஆண்டில் சபையார் அனைவரும் இணைந்து ஒரு ஆலயத்தை வலந்தையில் கட்டி முடித்தனர். 1855 தொடக்கம் 1861 வரை அங்கு பணியாற்றிய C. M. கொர்நெலியஸ் அவர்கள் அராலிக்கு மாற்றம் பெற்றுச் சென்றார். ஆரம்பகாலம் இச்சபையின் உருவாக்கத்து க்கும் வளர்ச்சிக்கும் ஆலோசனைகளைக் கொடுத்த அருட்பணி. லீவை ஸ்டோல்டிங் அவர்களே சேகர வழிகாட்டியாச் செயற்பட்டார். இவ்வாறு 1862 – 1890 வரை சுதேச குருவானவர்கள் அங்கு பணியாற்றி யிருந்தாலும் மிசன் தொண்டர்கள் இவர்களை வழிநடாத்திய காலமாகவே இக்காலம் கடந்து போயிற்று. இக்காலம் Rev. Howland, Rev. M.D. Sanders, Rev. Reimer, Rev. E.P. Hastings, Rev. Hutchings ஆகியோர் பணியாற்றினர். 1891ம் ஆண்டில் முதல் விவாகம் நடைபெற்றது. மணமகன் டேவிட் M. சபாபதி, மணமகள் ஹரியற் அன்னபூரணம் யாக்கோபு.

காரைதீவில் மிசன் தொண்டர்களால் ஐந்து மிசன் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அத்துடன் மானிப்பாய் கிறீன் வைத்தியசாலையின் ஒரு கிளை ஆரம்பிக்கப்பட்டு அங்கு மருத்துப்பணியும் ஆரம்பிக்கப் பட்டது. மிசன் தொண்டர்கள் படகுகளில் பயணம் செய்து மருத்துப்பணிகளை மேற்கொண்டனர்.

கிற்சுக்கொக், ஐசக்போல், K. A. கந்தையா, J. K. சின்னத்தம்பி, E. T. உவில்லியமடஸ், B. C. D. மேதர், A. C. தம்பிராஜா, J. M. சிங்கநாயகம் S. P. விஜயரட்ணம் ஆகியோர் 1955 வரை 100 வருடங்களில் பணியாற்றி யுள்ளனர். அதற்குப்பின் இயற்கையனர்த்தங்கள் இடம்பெயர்வுகள், யுத்தங்கள் போன்ற அனர்த்தங் களை இத் திருச்சபை சந்தித்தாலும் திருச்சபையும் மக்களும் விசுவாசத்துடன் பயணிக்கின்றனர். 2025ம் ஆண்டு ஒக்டொபர் மாதம் அருட்பணி சுதாசினி சுதாகரன் தலைமையில் ஆலயம் முழுமையாக புனரமைப்புச்



செய்யப்பட்டு புதுப்பொழிவுடன் திகழ்கின்றது. தற்போது அருட்சகோ. S. அற்புதஜீவன் மிசன் இல்லத்தில் தங்கியிருந்து அருட்பணிகளை ஆற்றி வருகின்றார்.

### Ministers who served in
## Karainagar Church

**Mission Work Started 1835**

| | |
|---|---|
| Mr. Cyrus Mann (Catechist) | 1835 - 1839 |
| Mr. Lovell (Catechist) | 1839 - 1845 |
| Mr. R. Moses (Catechist) | 1845 - 1849 |
| Mr. C. M. Cornelius | 1849 - 1855 |

**Church was Organized 1855**

| | |
|---|---|
| Rev. C. M. Cornelius | 1855 - 1861 |
| Rev. W. W. Howland | 1862 - 1867 |
| Rev. M. D. Sanders | 1868 - 1869 |
| Rev. W. E. De. Reimer | 1870 - 1871 |
| Rev. E. P. Hastings | 1872 - 1879 |
| Rev. R. C. Hastings | 1880 - 1888 |
| Rev. S. W. Howland | 1889 - 1890 |
| Rev. C. M. Sanders | 1891 - 1906 |
| Mr. W. E. Hitchcock | 1907 - 1908 |
| Rev. Isaac Paul | 1908 - 1920 |
| Rev. K. A. Kandiah | 1921 - 1924 |
| Rev. J. K. Sinnathamby | 1925 - 1926 |
| Rev. E. T. Williams | 1926 - 1930 |
| Rev. E. K. Yesuthasan | 1931 - 1934 |
| Rev. S. T. Asirvatham | 1935 - 1938 |
| Rev. B. C. D. Mather | 1939 - 1942 |
| Rev K. A. Kandiah | 1943 - 1946 |
| Rev. A. C. Thambirajah | 1947 - 1950 |
| Rev. J. M. Singanayagam | 1951 - 1954 |
| Rev. S. P. Vijayaratnam | 1955 - 1959 |
| Rev. G. M. Kanagaratnam | 1959 - 1963 |
| Rev. N. Kathiravelu | 1963 - 1967 |
| Rev. N. W. G. Sugunarajah | 1967 - 1971 |
| Rev. N. Subramaniam | 1971 - 1975 |
| Rev. S. P. Jeyasingam | 1975 - 1979 |
| Rev. S. Manopavan | 1979 - 1980 |
| Rev. T. S. Premarajah | 1980 - 1982 |
| Rev. A. Jeyakumaran | 1982 - 1987 |
| Rev. A. V. Jesuthasan | 1987 - 1990 |
| Rev. J. B. Thevaradchelvan | 1990 - 1991 |

**Displaced due to the Military Operations**

| | |
|---|---|
| Rev. K. A. Selvanayagam | 1999 - 2003 |
| Rev. A. B. Thevathas | 2003 - 2010 |
| Rev. A. W. Kamalakumaran | 2010 - 2014 |
| Rev. N. Sivakumar | 2014 - 2015 |
| Rev. A. S. Thevagunananthan | 2015 - 2016 |
| Rev. Enoch. P. Punitharajah | 2016 - 2017 |
| Rev. J. B. Thevarudchelvan | 2017 - 2020 |
| Rev. Suthasini Suthakaran | 2020 - 2026 |
| Bro. S. Atputhajeevan | 2026 - |

தகவல் தொகுப்பு

**அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன்**

## கிறிஸ்தவ இறையியல்...

(01ஆம் பக்க தொடர்ச்சி)

வகையில், 7வது அதிபரின் திருநிலைப்படுத்தும் வழிபாட்டிற்கும் இதே இடம் தெரிவு செய்யப்பட்டது. அத்துடன், கிறிஸ்தவ ஐக்கியத்தை வலுப்படுத்தும் கல்லூரியின் அர்ப்பணிப்பையும் இந்நிகழ்வு வெளிப்படுத்தியது.

புதிய அதிபராகப் திருநிலைப்படுத்தப்பட்ட அருட்கலாநிதி. பி. ராஜன் றோகான் அவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனையைச் சேர்ந்தவர். இவர் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியில் இறையியல் இளங்கலைமானி (B.Th.) மற்றும் தெய்வீகவியல் இளங்கலைமானி (B.D.) ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளார். மேலும், கொழும்பில் அபிவிருத்திக் கற்கைகளில் முதுகலைமானிப் பட்டத்தையும் (Master's in Development Studies) அமெரிக்காவின் ஈடன் இறையியல் கல்லூரியில் (Eden Theological Seminary) இறையியல் கற்கைகளில் முதுகலைமானிப் ட்டத்தையும் (MTS) பெற்றுள்ளார்.

அருட்கலாநிதி. பி. ராஜன் றோகான் அவர்கள் சமாதானத்தைக் கட்டியெழுப்பல் மற்றும் நல்லிணக்கப் பணிகளில் சிறப்பாக அறியப்படுபவர். தமிழர் - சிங்களவர் நல்லிணக்கம், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான அமைதியான இணை வாழ்வு, மற்றும் சமயம் மற்றும் நம்பிக்கைகளுக்கான சுதந்திரத்தை முன்னிறுத்துதல் ஆகிய துறைகளில் அவரது பணி குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது. அவரது சேவைகளைப் பாராட்டி EHED–Caritas அமைப்பினால் "Peace Actor Award" வழங்கப்பட்டதுடன், Alabama University மூலம் கௌரவக் கலாநிதிப் பட்டமும் வழங்கப்பட்டுள்ளது. தெற்காசிய சமயச்சுதந்திர மன்றத்தின் (South Asia Forum for Freedom of Religion) நிறுவனர் உறுப்பினர்களில் ஒருவராகவும், Asian Campus Ministry அமைப்பின் கல்விப் பயிற்றுவிப்பாளராகவும் அவர் பணியாற்றி வருகிறார்.



இந்நிகழ்வில் ஓய்வு பெறும் அதிபரான அருட்பணி அ. கமலக் குமரன் அவர்கள் தனது பொறுப்புகளை புதிய அதிபரிடம் ஒப்படைத்தார். அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை, தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண ஆதினம் (JDCSI) மெதடிஸ்த திருச்சபை, அங்கிலிக்கன் திருச்சபை மற்றும் கத்தோலிக்க திருச்சபை ஆகியவற்றின் குருமார்கள் மற்றும் பொதுமக்கள் பிரதிநிதிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இது கிறிஸ்தவ ஐக்கியத்தின் சிறப்பான வெளிப்பாடாக அமைந்தது. இறைசெய்தியினை கிறிஸ்தவ இறையியல் கல்லூரியினுடைய மூதவையின் முன்னாள் தலைவரும் தற்போதைய உறுப்பினருமான அருட்பணி. அ. ஜெயக்குமரன் அவர்கள் வழங்கினார். தனது செய்தியில், மனித கண்ணியம், ஆவிக்குரிய புதுப்பிப்பு, சமூக வலுவூட்டல் மற்றும் மேய்ப்புப் பணிக்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றில் மாற்றத்தை உருவாக்கும் பார்வையுடைய இளம் கிறிஸ்தவ தலைவர்களை உருவாக்குவது கல்லூரியின் முக்கிய பொறுப்பாகும் என வலியுறுத்தினார்.

இந்நிகழ்வு சிற்றுண்டி மற்றும் ஐக்கிய உறவாடலுடன் நிறைவுற்றது. திருநிலைப்படுத்தும் வழிபாட்டுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் கல்லூரியின் மாணவர் நலன்துறை காப்பாளரான அருட்பணி. டானியல் ரஞ்சித் அவர்கள், இறையியல் மாணவர்களுடன் இணைந்து ஒருங்கிணைத்தனர். அவர்களின் அர்ப்பணிப்பான முயற்சியால் நிகழ்வு சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற்றது.

# இறைபணியில்

## 25 வருடங்கள்

அருட்பணி. அன்றூ ஜெயானந்தம் அவர்கள் கிழக்கு மாகாணத்தின் கல்முனைப் பகுதியை பிறப்பிடமாகக் கொண்டவர். 31.01.1962 இல் பிறந்த இவர் கல்முனை மெதடிஸ்த திருச்சபையைத் தாய் திருச்சபையாகக் கொண்டவர்.

கல்முனை "வெஸ்லி" உயர்தரப் பாடசாலையில் கல்வி பயின்ற இவர், தன்னுடைய சகோதரன் முறையான "கிரான் ஜீவன்" என்று அழைக்கப்பட்ட அருட்பணி ஜீவரட்ணம் அவர்களுடன் ஏழு வருட இறைபணியாற்றினார். இவ்வாறு ஆனைக்கோட்டையில் "நிறைவான புதுவாழ்வு நிலையம்" (Abundant New Life) என்னும் திருச்சபை அமைப்பில் பணியாற்றிய இவர், தொடர்ந்து இறைபணியில் இறையியல் பயிற்சி கொள்ளும் பொருட்டு 1997 ஆம் ஆண்டு மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியற் கல்லூரியில் இணைந்து கொண்டார். அங்கு இறையியல் டிப்ளோமா (Dip. In Theology) மற்றும் இளம் இறையியல்மாணி (B.Th) பட்டங்களைப் பெற்று இறையியல் கல்வியை நிறைவு செய்த இவர், 2001 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி தன்னுடைய இறைபணியை அராலித் திருச்சபையில் ஆரம்பித்தார். 2001 - 2003 காலப் பகுதியில் அராலியில் பணியாற்றிய இவர் பின்பு ஏழாலை தெற்கு (2003 - 2007), பண்டத்தரிப்பு (2007 - 2014) அராலி (2014 - 2018), தெல்லிப்பளை (2018 - 2022), சத்தியபுரம் (2018 - இன்றுவரை) ஆகிய பணிகளங்களில் பணியாற்றினார். இவர் ஏழாலை தெற்கு திருச்சபையில் இறைபணியாற்றும்போது இவர் 16.09.2007ம் ஆண்டு மட்டக்களப்பு ஊறணி, தூய. யோவான் ஆலயத்தில் நடைபெற்ற குருத்துவ அபிஷேக வழிபாட்டில் அபிஷேகத்தினைப் பெற்றுக்கொண்டார்.




அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் அருட்பணியாளராகப் பணிபுரிந்து வரும் அருட்பணியாளர் கிருஷ்ணபிள்ளை அன்றூ ஜெயானந்தம் அவர்கள் இவ்வருடம் (2026) இறைபணியில் 25 வருடங்களை நிறைவு செய்திருக்கிறார். இவருடைய இறைபணியினைக் கௌரவிக்கும் நிகழ்வு 29 மே 2026 அன்று கிறிஸ்தவ இறையியற் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் 14வது வருடாந்த பேரவை கூட்டத் தொடரின் இரண்டாம் நாள் அமர்வின்போது முன்னெடுக்கப்பட்டது. பேரவைக் கூட்டத்தில் கலந்து கொண்ட 120க்கும் மேற்பட்ட திருச்சபை பிரதிநிதிகள் மற்றும் அருட்பணியாளர்கள் மத்தியில் அருட்பணியாளர் அன்றூ ஜெயானந்தம் அவர்கள் திருச்சபையின் உப தலைவர் அவர்களால் மாலை அணிவிக்கப்பட்டும் பொன்னாடை போர்க்கப்பட்டும் கௌரவிக்கப்பட்டதோடு, திருச்சபைத் தலைவர் அவர்களால் நினைவுச் சின்னமும் வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்.

*- AST*

# Prayers for the Plain Man - William Barclay

## SIXTH DAY

### In the Morning

O Lord, our God, save us this day from all the sins into which we so easily and so continually fall.

Save us from demanding standards from others which we never even try to satisfy ourselves.

Save us from being very easy on our-selves and very hard on others.



Save us from making excuses in ourselves which in others we uses for things would condemn.

Save us from being wide-open-eyed to the faults of others, and blind to our own.

Save us from taking for granted all that our loved ones do for us, and from never realizing how much they do and how much we demand.

Help us all through this day to try to do to others what we would wish them to do to us, and so help us to fulfil the law of Jesus Christ. This we ask for Your love's sake. Amen.

### In the Evening

O God, the Lord of our good life, we give You thanks for every part of the day which is coming to an end.

We thank You for the morning light to call us from our resting beds.

We thank You for the midday hours filled with work and with many activities in the company of fellowmen. our

We thank You for the evening time to sit at home amidst our family circle, or to go out upon our pleasures with our friends. And now we thank You for the night and for kindly sleep.

We thank You for every happy thing which has come to us this day, and for all things which bring us joy when we remember them.

We ask You forgiveness for everything in today which hurts us and shames us when we remember it.

Grant unto us now to lay ourselves down, and to sleep in peace, because we are at peace with You, and at peace with our fellow-men: through Jesus Christ our Lord. Amen

# பிராந்திய நிகழ்வுகள்

## வாலிபர் ஒன்றுகூடல்
### யாழ் பிராந்தியம்

வாலிபர்பணி இவ்வருடம் இரு ஒன்றுகூடலினை முன்னெடுத்துள்ளனர். அந்த வகையில், 30.05.2026 ஆம் அன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை காரைநகர் கடற்கரை மண்டபத்தில், வாலிபர்பணி கூட்டுநர் அருட்பணி. வசந்தன் ஆனந்த் அவர்களின் தலைமையில் சிறப்பாக



நடைபெற்றது. ஆழத்திற்கு சென்று கிறிஸ்துவையும் அயலவர்களையும் அறிதல் என்ற தலைப்பில் இவ்வொன்றுகூடல் நடைபெற்றது.

தொடக்க வழிபாட்டை அருட்சகோ. எஸ். அற்புதஜீவன் மற்றும் அருட்சகோ. டொறின்டன் டானியல் ஆகியோர் இணைந்து ஏறெடுத்தனர். அன்றைய நாளுக்கான இறைசெய்தியை கிழக்கு பிராந்திய குருமுதல்வர் அருட்பணி. வி. டேவிட் நிருஷ்கன் வழங்கினார். யாழ் பிராந்திய குருமுதல்வர் அருட்பணி. எஸ். புவியரசன் சகோ. தேவானந் மற்றும் திரு. சுஜந்தன் ஆகியோர் வளவாளராகக் கருத்துரை வழங்கினர்.

இவ்வொன்றுகூடலில் அராலி, உடுவில், சத்தியபுரம், பண்டத்தரிப்பு நுணாவில் ஆகிய திருச்சபைகளில் இருந்து வாலிபர்கள் வருகை தந்திருந்தனர்.

மேலும் 04.02.2026 சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ் பிராந்திய வாலிபர்களுக்கான முழுநாள் ஒன்றுகூடல் மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியில் அருட்பணி. ஏ. கமலகுமாரன்

(09ஆம் பக்கம் பார்க்க)

## செயல்பட்டு மகிழ்வோம்

பண்டத்தரிப்பு வை.எம்.சி.ஏ முன்பள்ளி சிறுவர்களின் செயல்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு 17.06.2026 புதன்கிழமை மாலை 02:30 மணிக்கு சி.ஏ.சி.எம் திருச்சபை வளாகத்தில் திருமதி. ரோனி நிரோஷன் ரம்யா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. சிறார்களின் பான்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர். மங்கள விளக்கேற்றலுடன் சிறார்களின் சமய நிகழ்வும் அதனை தொடர்ந்து மும்மொழிகளிலும் மழலை மொழிகளினால் வரவேற்புரை நடாத்தப்பட்டது.

சபைக்குரு அருட்பணி. டி. எஸ். மதியாபரணம் ஆசி கூறி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்விற்கு திரு. இ. சர்வேஸ்வரா (விரிவுரையாளர் கல்வியல் துறை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்) பிரதம அதிதியாகவும் திரு. த. உதயகுமார் (பண்டத்தரிப்பு நாலாம் வட்டாரம் பிரதேச சபை உறுப்பினர்) சிறப்பு விருந்தினராகவும் திருமதி. கலிஸ்ரா சுபா நந்தன் (செயலாளர், முன்பள்ளி ஆசிரியர் சங்கம் சண்டிலிப்பாய் கோட்டம்) கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்ட இவர்களின் அருமையான விழிப்புணர்வூட்டக் கூடிய உரைகளின் மத்தியில் மைதான நிகழ்வுகள் குழச் செயல்பாடுகளாக கவர்ச்சியான முறையில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் பழைய மாணவர் நிகழ்வு, சிறுவர் கழக சிறார்களின் நிகழ்வு, பெற்றோர்களின் நிகழ்வு, வினோத உடை நிகழ்வு என்பன மைதானத்தை மகிழ்வோடு வைத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. *-DSM*

## பெந்தக்கோஸ்தே பெருவிழா

கடவுளுடைய அருள், ஆளுகை அங்கீகாரம் என்பன எல்லை கடந்து செயற்படுவன. அதாவது அனைத்துலகையும் சேர்ந்த அனைத்து மக்களையும் ஆட்கொள்ளக் கூடியவை என்பதை பகிரங்கப் படுத்திய நாள். பெந்தக்கோஸ்தே திருநாள் ஓர் குறிப்பிட்ட இனம், மதம், மொழி கலாச்சாரம் கடந்து கடவுள் செலாற்றுபவர் என்பதை தூய ஆவியர் பொற்றலுடன் வெளிப்படுத்திய நாள்.

இன்று திருச்சபை பெந்தக்கொஸ்தே திருநாளை அனுசரிக்கும்போது அதனை தனித்து ஒரு நினைவு கூறுதல் நாளாக மட்டுமன்றி மாறாக தமது இறையியில் பார்வையையும் மரபு சார்ந்த விசுவாச அறிக்கை யிலிருந்து வெளியேறி பரந்துபட்ட



பார்வையுடன் கடவுளின் அருள் ஆளுகை அங்கீகாரம் உள்ளது என்பதை புரிந்து கொண்டு தன்னை புதுப்பித்துக் கொள்ள வேண்டுமென மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரி முதல்வர் அருட் கலாநிதி. ராஜன் ரொகான் யாழ் பிராந்திய நற்செய்திப் பணியகத்தினால் நடாத்தப்பட்ட பெந்தெக்கொஸ்தே பெருவிழா பஜனையில் மறையுரையாற்றும் போது தெரிவித்தார்.

இந்திகழ்வானது 07.06.2026 ஞாயிறு மாலை 3.00 மணிக்கு நவாலித் திருச்சபையில் இயக்குநர் அருட்பணி. வை. நிவில் ரூபராஜ் தலைமையில் மானிப்பாய் சபை அருட்பணியாளர் மைக்கல் கெனடியின் செபத்துடன் ஆரம்பமானது. செபத்தைத் தொடர்ந்து இயக்குனர் வருகை தந்திருந்த சபையாரையும் அருட்பணியாளர்களையும் வரவேற்ற துடன் பாடகர் குழவினர் எந்த ஒழுங்குகளைப் பின்பற்ற வேண்டுமென தெரிவித்தார்.

கல்லூரி முதல்வர் தொடர்ந்து மறையுரையில் திருச்சபை தான் வாழும் சமூகத்தில் இந்த புதுப்பித்தலை புதுமையாக வெளிப்படுத்த வேண்டும். ஆகவே பெந்தக்கொஸ்தே நாள் கடவுளுடைய அருள் ஆளுகை அங்கீகாரம் எல்லை கடந்து செயல்படுவது என்பனை நினைவு கூறவும் உண்மையில் தம்மை புதுப்பித்துக் கொள்ளவும் அதனை பணிவாழ்வு செயல்படுத்தி தான் வாழும் சமூக சூழலில் புதுமையான மக்கள் அமைப்பாக இருத்தல் வேண்டும் என தெரிவித்தார்.

இப் பஜனை நிகழ்வில் யாழ் பிராந்திய திருச்சபைகளான காரைநகர், அராலி, பண்டத்தரிப்பு, அளவெட்டி, தெல்லிப்பளை, உடுவில், சத்தியபுரம், மானிப்பாய், நகர்ப்பணி, ஏழாலை, நவாலி, சாவகச்சேரி, நுணாவில் ஆகிய சபைகள் தூயாவியானவரின் அருளையும் தூயாவியானவரை வேண்டுதல் செய்தும், தூயாவியானவரின் ஆளுகையையும் போற்றி சிறப்பாக பாடினார்கள். திருமறை பாடங்கள் முறையே நவாலித் திருச்சபையைச் சேர்ந்த திரு. டிலான், திருமதி ஜெயவாணி பிறின்ஸ் ஆகியோர் வாசித்தார்கள்.

யாழ் பிராந்தியக்குரு அருட்பணி. ஜோன் புவியரசன் மன்றாட்டு செபத்தில் வழிநடாத்த அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை செயலாளர் அருட்பணி. ஏ. பி. தேவதாஸ் செபிக்க முன்னால் தலைவர் அருட்பணி. ரி. தேவநேசன் இறையாசியில் வழிநடத்தினார்.

இறுதியாக பிராந்திய செயலாளர் திருமதி. என். சஞ்சீவி நன்றியுரையினை தெரிவித்தார். கலந்து கொண்ட அனைவரும் தேனீர் உபசாரத்தில் மகிழ்ந்தனர்.நவாலித் திருச்சபையினர் முழுமையான அனுசரனை வழங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆர்வதோடு யாழ் பிராந்திய நற்செய்திப் பணியகம் முதல் தடவையாக பெந்தக்கொஸ்தே பஜனை நிகழ்வை நடாத்தினார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. *- DSM*

## கிழக்கு பிராந்திய அருட்பணியாளருக்கான சிறப்பு கருத்தமர்வு

கடந்த மே மாதம் 16 ஆம் திகதி அன்று ஊறணி, பரி. யோவான் ஆலயத்தில், கிழக்கு பிராந்திய அருட்பணியாளருக்கான சிறப்பு கருத்தமர்வு, கிழக்கு பிராந்திய குருமுதல்வர் அருட்பணி. வே. டேவிட் நிருஷிகன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வை கிழக்கு பிராந்திய ஊழியர் சங்க செயலாளர் அருட்பணி. சி. டானியல் செல்வகுமார் அவர்கள் ஒழுங்கு படுத்தியிருந்தார்.

இவ் நிகழ்வில் தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் செயலாளர் அருட்பணி. சுஜிதர் சிவநாயகம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, திருமுழுக்கு யோவான் அவர்களின் எளிமையான வாழ்வியல் கண்டிப்பான பணி மற்றும் இறை அழைப்பு குறித்து திருமறை படிப்பினையும் சிறப்புற வழங்கினார்.

மேலும் வெளிகளப் பயிற்சிக்காக வருகை



தந்திருந்த மருதனார்மடம், கிறிஸ்தவ இறையியல் கல்லூரி மாணவர்களான சகோ. நி. அன்ரூ, சகோ. எழிற்குமரன், சகோ. நிலவழகன் ஆகியோரும் இதில் பங்குபற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

*- VM*

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



அமெரிக்காவில் உள்ள வாஷிங்டன் பல்கலைக்கழகத்தினால் 06.06.2026 அன்று புதுடில்லியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் வணிக நிர்வாகத்தில் கலாநிதி பட்டத்தினை அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் பொருளாளர் **கலாநிதி. என். கே. ரமேஸ்குமார்** பெற்றமையையிட்டு மகிழ்வுறுகின்றோம்.



கொழும்பில் உள்ள பண்டாரநாயக்க நினைவு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பால் நடத்தப்பட்ட துறை சார்ந்த பட்டமளிப்பு விழாவிலும், பாதுகாவலர் (Defender) பிரிவில் விருது பெற்ற அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் அருட்சகோதரன் **எஸ். அற்புதஜீவன்** பெற்றமையையிட்டு மகிழ்வுறுகின்றோம்.



யாழ்ப்பாணம் YMCA அமைப்பின் தலைவராக எமது அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் சேவைத் திருப்பணி மன்றின் நிலைய இணைப்பாளர் **திரு. ரி. யூதராஜா** அவர்கள் தெரிவு செய்யப்பட்டமையையிட்டு மகிழ்வுறுகின்றோம்.



தேசிய மாணவர் படையின் 145 ஆண்டு கால வரலாற்றில் முதல் தமிழ் மாணவனாக, மதிப்புமிக்க "தேசிய மாணவர் படையின் சிறந்த மாணவர்" விருதினை உடுவில் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் உறுப்பினரான **ஏட்வின் அனுரிசன்** அவர்கள் பெற்றமையையிட்டு மகிழ்வுறுகின்றோம்.

இவர்கள் அனைவருக்கும்
**உதயதாரகையின் பாராட்டுக்கள்**

# ஒருங்கிணைந்த தூய ஆவியார் பெருவிழா

கிழக்கு பிராந்திய திருச்சபைகளின் ஒருங்கிணைந்த தூய ஆவியார் பெருவிழா, ஊறணி பரி. யோவான் ஆலய முன் வளாக திறந்த வெளியில்



14. 06. 2026 அன்று மாலை நடைபெற்றது. தூய ஆவியாரின் எழுப்புதல் பாடலகளை ஒருங்கிணைந்த பாடகர் குழாமாக தூய அந்திரேயா ஆலயம் நீலாவணை, தூய யோவான் ஆலயம் ஊறணி, தூய மாற்கு ஆலயம் நீதிச்சோலை ஆகிய திருச்சபை பங்குபற்றினர்.

மேலும் துதி வழிபாட்டை முருகண்டி திருச்சபையின் அருட்பணியாளர் ரி. சுசேந்தன் அவர்களுடன் இணைந்து சகோதரர்கள் யேசுகாந் மற்றும் மாறவர்மன் வழிநடாத்தினர். வழிபாட்டிற்கு மெருகூட்டும் வகையில் இசையை சகோதரன் கிரேசன் பிரசாந் சிறப்பாக வழங்கினார்.

விசேட செபங்களை அருட்பணி. ஜெரோம் போல் மற்றும் அருட்பணி. ஏ. எஸ். ரூபன் ஆகியோர் வழிநடாத்தினர். தூய ஆவியானவரின் பெருவிழாவிற் கான அருளுரையை கோட்டைமுனை மெதடிஸ்த திருச்சபையின் முகாமைக்குரு அருட்பணி. ந. அருள்நாதன் அவர்கள் வழங்கினார். இந் நிகழ்வை



கிழக்கு பிராந்திய அருட்பணியாளர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் ஊறணி திருச்சபை மக்கள் சிறப்பாக ஒழுங்குபடுத்தியிருந்தனர் இந் நிகழ்வில் சுமார் 100ற்கும் மேற்பட்ட விசுவாசிகள் கலந்துகொண்டு இறையாசியை பெற்றனர்.

*- VM*

# விளையாட்டு விழாக்கள்

### சத்தியபுரம் முன்பள்ளி

சத்தியபுரம் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா 03.07.2026 வெள்ளிக்கிழமை அன்று மாலை முன்பள்ளி முகாமையாளர் அருட்பணி. கே.அன்றூ ஜெயானந்தம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு CACMயின் யாழ்



பிராந்திய குரு முதல்வர் அருட்பணி. எஸ். ஜோன் புவியரசன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் சத்தியபுரம், தூய பவுல் ஆலயத்தின் செயலாளர் திரு. ஜெ. கலிங்டஸ் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

### சாவகச்சேரி, தூய தோமா முன்பள்ளி

சாவகச்சேரி தூய தோமா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா 27.06.2026 சனிக்கிழமை அன்று மாலை சாவகச்சேரி ரிபேர்க்



கல்லூரி மைதானத்தில் முன்பள்ளி முகாமையாளர் அருட்பணி. ஜி. டி. மைனசீலன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு CACMஇன் யாழ் பிராந்திய குரு முதல்வர் அருட்பணி. எஸ். ஜோன் புவியரசன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் சேவைத்திருப்பணி மன்றின் நிலைய இணைப்பாளர் திரு. த. யூதராஜா அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் பாடசாலையின் அதிபர் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

### குடத்தனை முன்பள்ளி

குடத்தனை முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா 24.06.2026 புதன்கிழமை அன்று மாலை முன்பள்ளி மைதானத்தில் முன்பள்ளி முகாமையாளர் அருட்பணி. எஸ். ஜோன் புவியரசன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு வடமராட்சி வலைய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. கே. சத்தியசீலன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் சேவைத்திருப்பணி மன்றின் நிலைய இணைப்பாளர் திரு. த. யூதராஜா அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் குடத்தனை திருச்சபையின் பணியாளர் திரு. ஏ. தேவனாந் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

### முறிகண்டி, புனித. பவுல் முன்பள்ளி

முறிகண்டி புனித பவுல் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் முன்பள்ளி மைதானத்தில் முன்பள்ளி முகாமையாளர் அருட்பணி. ரி. சுசேந்தன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் சேவைத் திருப்பணி மன்றின் நிலைய இணைப்பாளர் திரு. த. யூதராஜா அவர்கள் பிரதம விருந்தினராகவும் இந்துபுரம் கிராம அலுவலர் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் பாடசாலை அதிபர் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

### மாவைகலட்டி "வடலி - சிறுவர் அருட்பணி நிலையம்"

மாவைகலட்டி "வடலி - சிறுவர் அருட்பணி நிலையத்தின் மாலைநேர வகுப்பு மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த பங்குனி மாதம் நிலையத்தின் வளாகத்தில் நிலைய மேற்பார்வையாளர்



திருமதி. ஆர். ஞானதீபம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் செயலாளர் அருட்பணி. ஏ .பி .தேவதாஸ் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் அப்பிரதேச பாடசாலை அதிபர் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

*- TJ*

# திடப்படுத்தல் வழிபாடுகள்

*“நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்”* யோவான் நற்செய்தியாளன் கூற்றுக்கு அமைவாக அமெரிக்கன் மிசன் திருச்சபைகளில் பல திடப்படுத்தல் வழிபாடுகள் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்களுடைய தலைமையில் நடைபெற்றுள்ளன.

அந்தவகையில் தெல்லிப்பளை திருச்சபையில் கடந்த 05.04.2026, ஞாயிற்றுக்கிழமை காலை உயிர்ப்பின் திருநாள் வழிபாடு திடப்படுத்தல் வழிபாடாக



நடைபெற்றது. சபைக்குரு அருட்பணி. ஏ. கமலகுமாரன் அவர்களால் பயிற்று விக்கப்பட்ட செல்வி. பிரியந்தி யோகராஜா, செல்வி. ஏஞ்சலின் அபிநயா கமலகுமாரன், செல்வன். டினேஸ் டிஸ்லன் ஆகிய மூன்று (03) பிள்ளைகள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து உயிர் பெற்ற நாளிலே திடப்படுத்தல் வழிபாட்டின் வழியாகத் திருவிருந்திலே கலந்து கொள்ளும் சலாக்கியத்தினைப் பெற்றுக் கொண்டனர்.

அதேபோல் 01.02.2026 அன்று ஞாயிறு காலை நவாலி, அமெரிக்கன் சிலோன் மிசன்



திருச்சபையின் அருட்பாணியாளர் ஏ. எஸ். ரூபன் அவர்கள் ஒழுங்குபடுத்தியிருந்த திடப்படுத்தல் வழிபாட்டில் ஆன்ட்ரியா மிஷேல் சிவானந்தம் ரூபன், அன்ரனி சுதாகர் பிரின்ஸ், டிலான் அபிஷேக், சந்தியா பிரகேஷ், கிஷானிகா டாக்சன் சுதர்சன், தாயனி ரவிச்சந்திரன் ஆகிய ஆறு (06) பேர் பங்கேற்றுத் திருவிருந்தில் பங்குபெறும் சலாக்கியத்தினைப் பெற்றுக் கொண்டனர்.

18 ஜனவரி 2026 அன்று ஞாயிறு காலை 08 மணிக்கு பண்டத்தரிப்பு, அமெரிக்கன் சிலோன் மிசன் திருச் சபையில், அருட்பணியாளர் ஜே. தேவருட்செல்வம் அவர்கள் ஒழுங்குபடுத்தியிருந்த



திடப்படுத்தல் வழிபாட்டில் திருமதி. பிருந்தா ரஞ்சித்குமார், செல்வி. மனோன்மரியா நோபில் சுரேந்திரன் ஆகிய இருவர் (02) திடப்படுத்தல் பெற்று திருச்சபையின் முழு அங்கத்தவர்களாக இணைக்கப்பட்டனர்.

மேலும் 2026, ஜனவரி 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று, காலை 10:30 மணிக்கு வவுனியா பகுதியில் உள்ள கல்மடு திருச்சபையில், சபைகுருவும் பிராந்திய குருமுதல்வருமான அருட்பணி. ஆர். ஜோன்செல்வம் அவர்களினால் திடப்படுத்தலுக்காக



ஆயத்தப்படுத்தப்பட்ட தயாபரன் தர்சினி, சிறிதரன் யோகேந்தினி, வைரமுத்து சரோஜா, சிம்சன் வினித், யூட் தருண் ஆகிய ஐவர் இவ்வழிபாட்டில் திடப் படுத்தலைப் பெற்றுக் கொண்டு திருச்சபையின் முழு அங்கத்தர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

அதேபோல் கடந்த வருடம் 2025இல் நவம்பர், டிசம்பர் மாதங்களில் பல திருச்சபைகளில் நடைபெற்ற திடப்படுத்தல் வழிபாட்டின் வழியாகப் பலர் ஆண்டவர் இயேசுவின் அன்பின் விருந்தாம் திருவிருந்திலே கலந்து கொள்ளும் சலாக்கியத்தினைப் பெற்றுக் கொண்டனர். அருட்கலாநிதி. ராஜன் றோகான் அவர்கள் ஒழுங்கமைப்பில், டிசம்பர் 07, 2025 கொழும்பு (தெகிவளை) திருச்சபையில் நடைபெற்ற திடப்படுத்தல்



வழிபாட்டில் அபிஜித்தா ஜோசேப், ஜீவினி ஜீவருபன், டென்சிகா கமலேஸ்வன், பீற்றர் அலோசியஸ், கிசாந் சந்திரராஜா ஆகிய 05 பேரும், அருட்பணி. வி. டேவிட் நிருஷ்சிகன் அவர்கள் ஒழுங்கமைப்பில்,நவம்பர் 23, 2025 கோணாவில் திருச்சபையில் நடைபெற்ற



திடப்படுத்தல் வழிபாட்டில் ர. சிராணி (கோணாவில்), வி. அஜந்தன் (கோணாவில்), பொ. கிக்ஷாந்தன் (கோணாவில்), செ. மைக்கல்ராஜ் (கோணாவில்), ஜோ. இராஜபத்தி (கோணாவில்), யோ.அனுப்பிரியா (செல்வாநகர்), யோ. துளசிகா (செல்வாநகர்), ஆகிய 07 பேரும், அருட்பணி. எம். டி. போல்சுரேஷ் நவம்பர் 09, 2025 உடுவில் திருச்சபையில் நடைபெற்ற திடப்படுத்தல் வழிபாட்டில்



(12ஆம் பக்கம் பார்க்க)

## வாலிபர் ஒன்றுகூடல்...

(07ஆம் பக்க தொடர்ச்சி)

அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இறைவனின் நாமத்துக்கு ஏற்புடையதாயும், இளம் சமூகத்தினருக்கு உகந்ததாயும், இலங்கை நாட்டுச் சட்டத்தின் முக்கியத்துவத்தையும் இறையியல் சட்டத்தின் சாராம்சத்தையும் எடுத்துரைப்பதாயும் இவ் ஒன்றுகூடல் காணப்பட்டது.

இவ் ஒன்றுகூடலில் அருட்பணி. எம். டி. போல் சுரேஷ் மற்றும் திரு. ஆர். சுஜந்தன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். மேலும் சட்டம் சார்ந்த விடயங்களையும், ஐயங்களையும் பற்றியக் கலந்துரையாட சட்டத்தரணி அகிலன் வளவாளராக கலந்துகொண்டு, வாலிபர்களை கவரும் வகையிலும், சிந்திக்கவைக்கும் முகமாகவும், உற்சாகப்படுத்தும் வகையிலும் அவரது கலந்துரையாடல் காணப்பட்டது.



இதனைத் தொடர்ந்து குருவானவர்களின் ஜெபமும் இறைவார்த்தைகளும் கூட்டத்தை நிரப்பியது. இறுதியாக ஆங்கில மொழியின் முக்கியத்துவம் பற்றியும் அம் மொழியின் சிறப்பியல்புகள் பற்றியும் அனைவருக்கும் புரியும் வகையில் அருட்பணி. டானியல் ஜெயரூபன் அவர்கள் சிறப்பான உதாரணங்களுடன் வாலிபர்களிடையே முன்வைத்தார்.

அதனைத் தொடர்ந்து ஆளுமை மற்றும் ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்ட சிறு சிறு விளையாட்டுக்களும், சிற்றுண்டிகளும், வாலிபர் களுக்கான மதிய உணவும் சிறப்பான முறையில் ஒழுங்குபடுத்தி யிருந்தனர். இவ் வாலிபர் ஒன்றுகூடலில் பங்குபற்றிய மாணவர்கள் சட்டம் பற்றிய விழிப்புணர்வும் இறை ஆசீர்வாதமும் பெற்றுக் கொண்டோம் என கருத்துக் களை தெரிவித்துச் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. *- SJP, SC*

## நன்றி செலுத்தும் வழிபாடு

கர்த்தருக்குள் நித்திரையடைந்த அருட்பணி. அருளானந்தம் கிங்ஸ்லி சுரேந்திரன் அவர்களின் வாழ்வுக்கும் பணிக்குமான ஐந்தாம் ஆண்டு நன்றி



செலுத்தும் வழிபாடு பண்டத்தரிப்பு திருச்சபையின் சபைக்குரு அருட்பணி. டி. எஸ். மதியாபரணம் தலைமையில் 13.03.2026 வெள்ளிக் கிழமை மாலை 5 மணிக்கு நடைபெற்றது இவ்வழிபாட்டில் சி.ஏ.சி.எம் திருச்சபையின் முன்னாள் தலைவர் அருட்பணி. ரி. தேவநேசன் அவர்கள் இறைச்செய்தியை பகிர்ந்து கொண்டார்.

சுரேந்திரன் போதகர் மாங்குளம் மகிழ்ச்சிபுரம் கிராமத்தில் தனது பணியை ஆரம்பித்து, பண்டத்தரிப்பு திருச்சபையில் பணியாற்றிய இறுதி ஆண்டில் கர்த்திருக்குள் நித்திரையடைந்தார். இவர் அளவெட்டி, உடுப்பிட்டி, மானிப்பாய், ஏழாலை வடக்கு, தெற்கு,ஸ்ரீ தெல்லிப்பளை போன்ற பல திருச்சபைகளில் பணியாற்றிய சிறந்த இறைபக்தியும் ஆன்மீகப் பலமும் சிறந்த அரசியல் ஆய்வாளரும் பொறுமையான தாழ்மையான ஒரு பணியாளர் ஆவார்.

வழிபாட்டைத் தொடர்ந்து போதகர் குடும்பத்தினரால் சபையார் அனைவருக்கும் இரவு உணவு பரிமாறப்பட்டது. போதகர் நினைவாக ஆலய வளாகத்தில் மரக்கன்றும் நாட்டப்பட்டது. இந்நிகழ்விற்கு போதகரின் குடும்ப உறவுகளும் அவர் பணியாற்றிய சபைகளில் இருந்து சில விசுவாசிகளும் கலந்து கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. *- DSM*

# அதிதியும் ஐந்து கேள்விகளும்

## இவ்விதழுக்கான அதிதி - அருட்பணி. T. E. அசோக்குமார்

### இறைபணியின் அழைப்பும் ஆர்வமும்

“நான் குருத்துவ ஊழியத்திற்காக முன்வந்தபோது கொழும்பிலுள்ள ஒரு பணியகத்தில் கணக்காளராக பணிசெய்து கொண்டு AAT (கணக்கியல்) கற்கை நெறியை Oxonia Institute ல் கற்றுக்கொண்டிருந்தேன்.



ஆயினும், அன்றிருந்த அரசியல் சூழ்நிலை காரணமாக கொழும்பில் இடம் பெறும் குண்டு வெடிப்புக்கள் மற்றும் வரவிலும் செலவு அதிகமான பொருளாதார நிலை காரணமாகவும் வாழ்வில் ஒரு திருப்தியற்ற நிலையே காணப்பட்டது. இச்சூழலிலே எனது தாயார் ஊழியத்தை தொடரும்படி என்னையழைத்தார்.

நான் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியபோது எனது நேர்முகத் தேர்விலே என்னை பரீட்சித்தவர்கள் அருட்கலாநிதி. எஸ். ஜெபநேசன். அப்பொது அவர் யாழ்பாணக் கல்லூரியின் அதிபராக இருந்தார். சேவக். சாம் அல்பிரட், அருட்பணி . சி. ரி. ரோபேட்ஸ் மற்றும் அருட்பணி. டி. ஆர். அம்பலவாணர் ஆகியோர் ஆவர். இந்த நேர்காணல் குழுவிற்கு தலைமை தாங்கிய அருட்கலாநிதி. எஸ்.ஜெபநேசன் என்னைப் பார்த்து ஆங்கிலத்தில் கேள்விகளை எழுப்பினார். அவர் கேட்ட முதல் கேள்வி என்னவென்றால் “You have state in the application that you worked as an accounts clerk. What makes you to study Theology” என்று வினா எழுப்பினார். அதற்கு நான் அளித்த பதில் “I was inspired by my mother” தொடர்ந்து வேதாகமத்தில் கேள்விகளை எழுப்பினார். நான் அதற்கு பதில் அளித்தேன்.



எனது தாயார் அடிக்கடி கூறுவார் சிறு வயதில் எனக்கு காய்ச்சல் தீடிரென அதிகரித்து அது பின்னர் Numonia காய்ச்சலாக மாறியது. அதன்போது நான் இணுவில் Macleod ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு வைத்தியர் ஜோய் கனகராஜா அவர்களால் சிகிச்சை யளிக்கப்பட்டேன். அவ்வேளையில் எனது தாயார் தாம் ஒரு இறை பொருத்தனை செய்ததாகவும், அப்பொருத் தனையில் தனது மகன் உயிர்பிழைத்தால் மகனை இறையூழியத்திற்கு அனுப்புவதாகவும் அடிக்கடி எனக்கு கூறுவார். அச்சம்பவம் எனது அடி மனதிலிருந்து இறையூழியத்திற்கு என்னையழைத்தது. இவ்வார்த்தைகளே என்னையழைத்தவர் உண்மை உள்ளரென்று நம்பி என்னை இறைபணிக்கு ஒப்புக்கொடுத்தேன்.

### யுத்த காலமும் குடத்தனை திருச்சபையனுபவமும்”

நான் உடுப்பிட்டி திருச்சபையிலிருந்து குடத்தனை திருச்சபைக்கு மாற்றலாகி போனபோது, அப்பொழுது வடமராட்சி பகுதி முழவதும் விடுதலை புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. அப்போது மின்சார வசதி இல்லை. ஆனால் எங்கும் போய்வரும் சுயாதீனமிருந்தது. வலிகாமம் பகுதியில் முன்னேறி பாச்சல் நடவடிக்கையினை இராணுவம் ஆரம்பித்த காலத்தில் மக்கள் இடம்பெயர்ந்து சாவகச்சேரி, வரணி, குடத்தனை, வன்னி பெருநிலப்பரப்பு போன்ற பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்தனர். அவ்வேளையில் குடத்தனை பகுதியிலும், குடத்தனைத் திருச்சபை வளாகத்திலும் இடம்பெயர்ந்த மக்கள் இருந்தனர்.

ரிவிரச இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு, அது கொடிகாமம் சந்திவரை விஸ்தரிக்கப்பட்டபோது எம்மோடு இருந்த இடம்பெயர்ந்த மக்கள் தமது பகுதிகளை நோக்கி இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்குள் செல்ல ஆரம்பித்தனர். இதனைத் தொடர்ந்து குடத்தனையிலிருந்தும் அதனை சூழவுள்ள பிரதேசங்களிலிருந்தும் மக்கள் வடமராட்சி கிழக்கு, வடக்கு பகுதியிலிருந்தும் வன்னி பெரும் நிலபரப்பை நோக்கிச் செல்ல ஆரம்பித்தனர். இதனால் குடத்தனைத் திருச்சபையிலிருந்த விசுவாசிகள் பொருளாளர் திரு. இராசஇரத்தினம் குடும்பம் உட்பட வன்னி பெருநிலப்பிற்கு சென்றார்கள். இதனால் குடத்தனை திருச்சபையிலும் தனிமையுணர்வு அதிகரித்தது. அவ்வேளையில் திரு. திருமதி. சிவானந்தராஜா, றோசா அக்காவின் சகோதரி மதி ஆகியோரும் வேறு சில குடும்பத்தினரும் குடத்தனை ஆலயத்தில் எம்மோடு வழிபாட்டில் கலந்து கொள்வது வழக்கம். சில மாதங்களின் பின்பு கொடிகாமம் சந்தியில் நின்ற இராணுவம் பருத்தித்துறை நகரத்தை நோக்கி நகர ஆரம்பித்த பின்னர், வரணி, முள்ளி, மணல்காட்டு சந்தி பகுதிகளில் தமது முகாம்களை நிறுவி பருத்தித்துறை நகரப் பகுதியில் தமது வடமராட்சி பகுதிக்கான தலைமையகத்தை நிறுவினர். இவ்வேளையில் பருத்தித் துறையிலிருந்து வடமராட்சி கிழக்கு நோக்கி கடல் வழியாகவும் தரை வழியூடாகவும் தமது சுற்றி வளைப்பை மேற்கொள்வர். அவ்வாறு சுற்றி வளைப்பை மேற்கொள்ள முனையும் போது பரஸ்பர துப்பாக்கி சூடுகளும், செல்தாக்குதல்களும் நடைபெறும். இதன்போது ஒரு துர்அதிஸ்ட சம்பவம் நடைபெற்றது.



குடத்தனை சந்தியில் காவல் கடமையில் இயக்க வாலிபர்கள் நிற்பது வழக்கம். ஒரு முறை சுற்றிவளைப்பு பெரியளவில் இடம் பெற்றது. அப்பொழுது குடத்தனை கரையூரில் அருட்தந்தை. பி. எம். இம்மானுவேலின் ஆலயமிருந்தது. அவர் பருத்தித்துறை தூய. தோமா ஆலயத்திலிருந்து நற்கருணை ஆராதனைக்காக குடத்தனைக்கு வருவார். அவ்வாறு வரும் வேளையில் என்னையும் சந்தித்து உரையாடுவார். பெரியளவிலான சுற்றிவளைப்பு இடம் பெற்றபோது அருட்தந்தை. பி. எம். இம்மானுவேலின் ஆலயம் பலத்த சேதம் அடைந்தது. ஒருநாள் அவர் அவ்வாலயத்தை பார்க்க வரும்போது சொன்னார். சிறியளவில் தான் இயக்கமிருக்கின்றது. அவர்கள் இனி ஓடி விடுவார்களென்று கூறினார்.

ஆலயம் பலத்த சேதத்தை பார்வையிட்ட பின்னர் அருட்தந்தை. பி. எம். இம்மானுவேல் பருத்தித்துறை இரணுவத்திடம் சென்று உங்கள் இராணுவ நடவடிக்கையால் ஆலயம் பலத்த சேதமடைந்தது. எனவே அதற்கான செலவு தொகையை தரும்படி கோரினார். இதனை மதிப்பிடுவதற்காக இராணுவ தலைமையதிகாரி லேப். கேணல். லாரி விஜரத்தின ஒரு ஜீப் வண்டியில் அருட்தந்தை அவர்களையும் 4 இராணுவத்தினரையும் குடத்தனை பகுதிக்கு அனுப்பினர். ஜீப் வண்டி குடத்தனை சந்தியைடைந்ததும் இயக்க வாலிபர் ஜீப் வண்டியை நோக்கி துப்பாக்கி தாக்குதல் நடத்தினர்.





உடனே ஜீப் வண்டி சாரதி சாதுரியமாக ஜீப் வண்டியை பின் நோக்கி செலுத்தி பருத்தித்துறை நகரத்தை நோக்கி ஓடினார். இதிலே அருட்தந்தை. பி. எம். இம்மானுவேலும் சில இராணுவத்தினரும் காயமடைந்தனர். உடனே காயப்பட்ட அருட்தந்தையையும் இராணுவத்தினரையும் ஊலங்கு வானூர்தி (Helihopter) மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு உயிர் பிழைத்தனர். சம்பவதினம் நான் வரணி சந்தைக்கு சென்று திரும்பும்போது என்னை வழிமறித்த ஊர் மக்கள் என்னிடம் சம்பவத்தை கூறி, ஊர் மக்கள் எல்லோரும் ஆலயத்திலிருப்பதாகக் கூறினர். நான் குருமனைக்கு சென்றபோது அச்சமடைந்த மக்கள் ஆலய வளாகத்தில் தஞ்சமடைந்திருந்தனர். பின்பு மாலையில் தத்தம் வீடு திரும்பினர்.

யுத்த சூழ்நிலை தொடர்ந்து கொண்டிருந்தது. போதகரம்மா இரண்டாவது குழந்தையை கர்ப்பம் தரித்தார். யுத்த சூழ்நிலை காரணமாக தாய் சேய் கிளினிக்குகள் நடைபெறவில்லை. அம்பன் வைத்தியசாலை இயங்கவில்லை. போதகரம்மா தமது பிரசவ 9 மாதத்திற்கு வந்தபோது அவருக்கு உயர் குருதியமுக்கம் இருந்தது. அது பரீசீலிக்கப்பட்டு மருந்து எடுத்திருந்தல் வேண்டும். ஆனால் அந்த யுத்த சூழ்நிலை காரணமாக மருத்துவ வாய்ப்புக்கள், வசதிகள் கிட்டவில்லை. நான் போதகரம்மாவை அச்சுவேலியில்லத்தில் பிரவசம்வரை தங்கியிருக்கும்படி கேட்டேன். அவர் சம்மதிக்கவில்லை. உயர் குருதியமுக்கம் காரணமாக வயிற்றினுள் தாய் - சேய் தொப்பிள் கொடி அறுந்ததனால் வயிற்றினுள் குருதிகசிவு ஆரம்பித்து பின்னர் குருதிபோக்காக பரிண மித்தது. நான் றோசா அக்காவிடம் ஓடிச் சென்று நிலைமையைக் கூறினேன். அந்த நேரம் எந்த வாகன வசதிகளும் குடத்தனை பிரதேசத்தில் அனுமதிக்கப் படவில்லை. எந்த வாகன வசதியும் கிட்டாத பட்சத்தில் முருகையாவின் மோட்டர் சைக்கிளில் உடன் ஏற்றப்பட்டு மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதான வைத்தியசாலைக்கு செல்ல ஊரடங்கு அனுமதி பெறப்பட்டு, கை விளக்குடன் 18 இராணுவ வீதி தடைகளை தாண்டி பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, விடியற் காலையில் இறந்த குழந்தையை பிரசவித்தார். அவ் இறந்த குழந்தை பெண் குழந்தையாக இருந்தது.




### பணியற்றிய சபையில் சுவாரசிய நினைவுகள் ”

நான் பணியாற்றிய சபைகளில் அராலித் திருச்சபையில் 8 வருடம் பணியாற்றினேன். அச்சபையில் பெரும்பாலோர் உதவி ஒத்தாசை புரிந்தனர். நான் அங்கேயிருந்தபோது எனது B.A. (special) Degree ஐ முடித்தேன். தொடர்ந்து காமராஜர் பல்கலைகழகத்தில் எனது M.A பட்டப்படிப்பினை பதிவு செய்து பகுதி ஒன்று வரை செய்தேன். பின்பு வட்டுக்கோட்டை திருச்சபையில் மாற்றலாகி அருட்பணி. ஏ. கமலக்குமாரன் அவர்களுக்கு சேகரகுருவாக பணியாற்றினேன். அக்காலத்தில்

(13ஆம் பக்கம் பார்க்க)

# அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை



நாம் வாழும் சூழலில் பல்வேறு பட்ட அடிமைத்தங்களுக்கு முகம் கொடுக்கின்றோம். ஏகாதிபத்திய சூழலில் நாடுகளைக் கைப்பற்றி தமது கட்டுப் பாட்டிற்குள் வல்லரசுகள் வைத்துக்கொள்ள வேண்டுமெனப் பெரும்பாடுபடுகின்றன. உதாரணமாக ஐக்கிய அமெரிக்கா, வெனிசுவெலா, கிறீன்லாந்து போன்ற நாடுகளை பல்வேறுபட்ட அடிமைத் தணங்களுக்குள் கட்டுப்படுத்தியுள்ளனர். மேலும் அமெரிக்கா தற்போது பொருளாதார கட்டுப்பாடுகளை விதித்து ஈரானில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் சீனா தாய்வானை பல்வேறு விதங்களில் அடிமைப்படுத்த எத்தினிக்கின்றது.

இன்றைய காலகட்டத்தில் வாலிபர்களைப் பல காரணிகள் அடிமைப்படுத்துகின்றன. அவைகளில் போதைப்பொருள் பயன்பாடு, நவீன தொழில்



நுட்ப பயன்பாடு போன்றவற்றைக் கூறலாம். அத்துடன் சில மூடநம்பிக்கைகளும் மனிதனை அடிமையாக்கும் காரணிகளாகக் காணப்படுகின்றன. எனவே இக்கட்டுரையில் பிழையான இறையியல் நம்பிக்கைகளில் இருந்து எவ்வாறு கடவுள் எம்மை விடுவிக்கின்றார் என்பதையே குறிப்பிட விரும்புகின்றேன்.

## 1. விடுவிக்கும் கடவுள்

இஸ்ரவேல் மக்கள் கடவுளை முதலில் விடுவிப்பவராகவே புரிந்து கொள்கின்றனர். (விடுதலைப்பயணம் 3:7) இவ்விடுவிக்கும் பணியைத் தொடர்ந்து ஆற்றுமாறு கடவுள் இயேசுவை உலகத்திற்குள் அனுப்புகின்றார். (லூக்கா 4: 16-22) இப்பணியை தொடர்ந்து செய்யுமாறு கடவுள் எங்களை உலகிற்குள் அனுப்பியுள்ளார். (யோவான் 20:21) எனவே விடுவிக்கும் பணி ஒர் கடவுளின் தூதுப்பணியாகும். (02 கொரிந்தியர் 5:16-20) எங்கே ஆவியானவர் உண்டோ அங்கே விடுதலைப்பணி இடம்பெறுவதாகப் பவுல் கூறுகின்றார்.

### பிழையான நம்பிக்கைகளில் இருந்து விடுதலை

திருமறையில் பல்வேறுபட்ட பிழையான நம்பிக்கையில் இருந்து கடவுள் தமது மக்களை காலத்திற்கு காலம் விடுதலை செய்து வருவதை நாம் காணலாம்.

அ) பிழையான வழிபாட்டு முறையும் அதிலிருந்து விடுதலையும்: ஒரு மனிதனோ அல்லது சமூகமோ கடவுளுக்குரிய மதிப்பயையும் மரியாதையையும் வார்த்ததையாலோ அல்லது அடையால சின்னங்களாலோ தெரிவிப்பதே வழிபாடு என்கிறோம். இஸ்ரவேல் மக்கள் பாபிலோனியாவில் அடிமைகளாக இருந்தபோது தானியேல் மன்றாடும் போது யன்னல் கதவுகளை எருசலேமை நோக்கி திறந்த வண்ணம் மன்றாடியதை நாம் வாசிக்கின்றோம். (தானியேல் 06:10) இதனூடாக கடவுள் எருசலேமில் மாத்திரம் இருக்கிக்ன்றார் என்ற பிழையான சிந்தனை அவரிடம் காணப்பட்டது. எனினும் அவர் இச்சிந்தனையில் இருந்து கடவுளின் உதவியால் விடுதலை பெற்று கடவுள் அனைத்துலக கடவுள் என்பதை அறிக்கை செய்தார்.

திருப்பாடல் 137இல் பாபிலோனியாவில் அடிமைகளாக இருந்த இஸ்ரவேலரைப் பார்த்து பாபிலோனியர்கள் ஆண்டவரின் பாடலைப் பாடுமாறு கேட்டனர். அப்போது இஸ்ராயேலர் பாபிலோனி யரை நோக்கி ஆண்டவரின் பாடலை அன்னிய னின் தேசத்தில் எப்படிப் பாடுவது எனக் கேட்டார். அவர்களின் நம்பிக்கைபடி கடவுள் பாபிலோனியா வில் இல்லை என்ற பிழையான நம்பிக்கையை கொண்டிருந்தனர். எனினும் கடவுள் அவர்களை இப்பிழையான நம்பிக்கைகளில் இருந்து விடுவித்து தனது இருப்புநிலை எங்கும் உள்ளது என்பதை உணர்தினார்.

ஆ) இஸ்ராயேல் மக்கள் தமது துன்பத்திற்கும் பாவத்திற்கும் இடையே எத்தகைய தொடர்பும் இல்லை என எண்ணினர். மேலும் தங்களுடைய முன்னோரின் தவறுகளே தாம் அனுபவிக்கும் துன்பங்களிற்கு காரணம் என எண்ணினர். எனினும் எசேக்கியேல் இறைவாக்கினர் 18ம் அதிகாரத்தில் இஸ்ராயேல் மக்களை நோக்கி பெற்றோர் திராட்சை காய்களை சாப்பிட பிள்ளைகளின் பற்கள் கூசும் எனக் எண்ணாதிருங்கள். ஒவ்வொருவரும் தமது தவறுகளுக்கு பொறுப்பாளிகள் என கூறினார். மேலும் ஏசாயா இறைவாக்கினர் 53ம் அதிகாரத்தில் இஸ்ராயேலரை நோக்கி நீங்கள் எதிர்கால சந்ததியின் விடுதலைக்காகவே நிகழ்காலத்தில் துன்பங்களை அனுபவிக்கின்றீர்கள் என அவர்கள் துன்பத்திற்கான சரியான காரணத்தை தெளிவு படுத்தி அவர்களைப் பிழையான நம்பிக்கையில் இருந்து விடுதலை கொடுக்கின்றார்.

இ) பாபிலோனியாவில் அடிமைகளாய் இருந்து விடுதலை பெற்ற இஸ்ராயேலர் யாவேயை வழிபடுவதில் இருந்து விலகிச் சென்றனர்.



ஏனெனில் பாபிலோனிய கடவுளாகிய “மார்டுக்” என்பவரிடம் யாவே தோற்றுப்போனதன் விளைவாகவே இஸ்ரவேலராகிய நாம் பாபிலோனியாவில் அடிமைகளாக வாழ்ந்தோம் என்றனர். இந்த பிழையான நம்பிக்கையில் இருந்து சகரியா மல்கியா போன்ற இறைவாக்கினர்கள் இஸ்ராயேல் மக்களை விடுவிக்கும் பணியில் அதிக இன்னல்களை அனுபவித்தனர்.

## 2. அரசியல் விடுதலை

நேரடியாக கூறமுடியாமல் காரிங்களை மறைமுகமாக எடுத்துக் கூறுதவற்காக ஆண்டவர் இயேசு உவமைகளை பயன்படுத்தினார். எனினும் (மாற்கு 05:01-19) இல் இயேசு புதுமைகளையும் இந்நோக்கத்திற்காகப் பயன்படுத்துகிறார். இங்கு பேய்பிடித்த மனிதனிடம் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட பேய்கள் காணப்பட்டன. இது ஒர் உரோம படையணியை குறிக்கிறது. எனவேதான் இவனை லேகியோன் எனவும் அழைத்தனர். இங்கு இயேசு உரோம அரசியலையே கண்டிக்கிறார். உரோம ஆதிக்கம் யூதர்களின் வாழ்வில் எல்லாப் பகுதிகளுக்குள்ளும் தாக்கத்தை ஏற்படுத்தியது. எனவே இந்த அடிமைத்தனத்தில் இருந்தே இயேசு மக்களை விடுவிப்பவராக மாற்கு காண்பிக்கின்றார். ஆகவே தனிமனித அடிமைத்தனமாக மாத்திரம் நாம் இதை கருதாமல் சமூக அடிமைத்தனத்தின் கருவியாகவும் நாம் இதனைக் கையாள அழைக்கப்படுகின்றோம்.

## 3. பொருளாதார விடுதலை

இன்றைய உலகில் பலர் பல்வேறுபட்ட பொருளாதார அடிமைத்தனங்களிற்குள் உட்பட்டுள்ளனர். இவர்களையும் இயேசு விடுவிப்பதை நாம் காணலாம். இதுவே அவரது பணிகளுக்குள் ஒர் பணியென (லூக்கா 01:46-55) வரையுள்ள மரியாவின் பாடலில் நாம் காணலாம். கடவுள் பசியுள்ளவர்களை நன்மையால் நிரப்பி ஐஸ்வரிய வான்களை வெறுமையாய் அனுப்பிவிடுவதும் இறையரசில் இயேசு கொண்டுவரும் ஒரு பொருளாதாரப் புரட்சியாகும். இப்புரட்சியே லூக்கா 19 : 1 -10 வரையான பகுதியில் இயேசு சகேயுவின் வாழ்வில் ஏற்படுத்துகிறார். எனவேதான் சகேயு தன்னிடம் உள்ளவைகள் தன்னுடையவை அல்ல என்ற முடிவுக்கு வருகின்றார். இதனூடாக பகிர்வு தோன்றுகின்றது. மகிழ்ச்சி இருக்கின்றது.

விடுவிக்கும் கடவுள் அன்றுபோல் இன்றும் பிழையான நம்பிக்கைகளில் இருந்தும் சமூக பொருளாதார அடிமைத்தனங்களில் இருந்தும் எம்மை விடுவிக்கின்றார். இன்றும் இப்பணிகளைத் தொடருமாறு அவர் எம்மை அழைக்கின்றார். நாம் இவற்றை செய்வதனூடாக கடவுளின் தூதுப் பணியை ஆற்றி இறையாட்சியில் உபகரணங்களாக எம்மால் மாறமுடியும்.

ஆக்கம்

**அருட்பணி அருளம்பலம் ஸ்ரீபன்**

பரி. யாக்கோபு ஆலயம், நல்லூர்,

## புதுப்பிக்கப்பட வேண்டிய...

(03ஆம் பக்க தொடர்ச்சி)

பதிலுரையில் பின்வருமாறு கூறினார். நீங்கள் கூறுவதின்படி இன்று முழு நேர இறையியல் கற்கைக்காக மாணவர்கள் முன்வருவது பெரும் சவாலாகவே இருக்கின்றது. இது எமது திருச்சபையில் மட்டுமல்ல பெரும்பாலான கத்தோலிக்க குருமடங்களிலும் பெந்தேகோஸ்து சபைகளிலும் முழு நேரமாக ஊழியர்கள், அருட்பணியாளர்கள் வருவது குறைவாகவே காணப்படுகின்றது. ஆயினும் இறையியல் கல்வியை கற்க வேண்டும் என்ற ஆர்வம் பொதுநிலையினர் மத்தியிலே இன்றும் தொடர்ச்சியாக காணப்படுகிறது. ஆகவே நாம் எமது இறையியல் கல்லூரியினைத் தனித்துக் குருத்துவ உருவாக்கத்துக்கு மட்டுமின்றி இறையியல் கல்வியை கற்க விரும்பும் அனைவருக்கும் அவர்களுடைய புரிந்து கொள்ளும் ஆற்றலுக்கு ஏற்ற வண்ணம் ஒழுங்கு செய்து கல்வியை வழங்குகின்றோம். மேலும் இறையியல் கல்வியை வேறு சமூக கல்வியியல் கட்டமைப்புகளோடு இணைத்துப் பொதுநிலையினர் விருப்பத்துக்கும் ஆர்வத் துக்கும் ஏற்ற கல்வியைக் கொடுக்க ஆயத்தம் செய்து உள்ளோம்.

யாழ்ப்பாண நம்பிக்கை நிதியத்தின் அறம் காவலர் உறுப்பினர்களாக திரு. இன்பஜோதி, அருட்பணி. யூட் சுதர்சன், அருட்பணி. ஜோன் அலன், செல்வி. ட்ரேசி ஜூட் ஆகியோர் பங்குபற்றினர். - *RR*

## இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தினருடைய செம்மணிப் புதைகுழிப் பகுதிக்கான விஜயம்

கடந்த ஒக்டோபர் மாதம் அருட்பணியாளரும் இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தினுடைய பொதுச் செயலாளருமான அருட்பணி. சுஜிதர் சிவநாயகம் அவர்களுடைய வழிகாட்டலிலும் நெறிப்படுத்தலிலும் தேசிய கிறிஸ்தவ மன்றத்தில் அங்கம் வகிக்கும் திருச்சபைகளின் தலைவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தனர். மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரிக் குடும்பத்தினரைச்



சந்தித்து அங்கு விருந்தினர் விடுதியில் தங்கிய அவர்கள் 30ம் திகதி காலை மருதனார்மடம் கிறிஸ்தவ சேவ ஆச்சிரம சமூகத்தினரைச் சந்தித்தனர். அதன் பின்னர் யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் யுத்தகாலத்தில் புதையுண்டதாகக் கருதப்படும் 200க்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்ட "சிந்துபாத்தி" மயானத்துக்கு விஜயம் செய்து அங்கு தமிழ் மக்களுடனான உறவை வழிப்படுத்தும் அடையாள பிரசன்னத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

இவ்வணியில் செயலாளர் அருட்பணி. சுஜிதர் சிவநாயகம், பேராயர் நிஷாந்த பெர்னாண்டோ, பேராயர் துஷாந்த லக்ஸ்மன் றொட்றிகோ, அருட்பணி. A. S. தேவகுணானந்தன் மற்றும் திருச்சபை தலைவர்கள் கலந்து கொண்டனர்.

*AST*

## உலர் உணவு பொதிகளும் நன்றி செலுத்தும் வழிபாடும்

நீண்ட காலம் சிறுவர் இல்லங்களின் வளர்ச்சியிலும் சிறுவர்களின் கல்வியிலும் பாதுகாப்பிலும் இருந்து கர்த்தருக்குள் நித்திரையடைந்த திரு. சுப்பையா இரட்ணவேல் அவர்களின் நான்காம் ஆண்டு நினைவாக பிரான்சில் வாழும் அவர்களது மகன் திரு. இரட்ணவேல் மகிந்தன் பண்டத்தரிப்பில் 40 வறிய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கினார்.

இந்நிகழ்வானது 15.06.2026 திங்கட் கிழமை மாலை 5 மணிக்கு திருச்சபை செயலாளர் திரு. ரி. உதயகுமார் தலைமையில் நடைபெற்றது. உலர் உணவு வழங்கும் நிகழ்வு முடிவடைந்ததும் திரு. சு. இரட்ணவேல் அவர்களின் கல்லறைக்கு சென்று மலர் மாலைகள் பூக்களினால் நன்றி செலுத்தி பின்னர் அவரது இல்லத்தில் ஓர் சிறப்பு வழிபாட்டினை நடாத்தி அருட்பணி . டி. எஸ். மதியாபரணம் அவர்கள் இறைசெய்தியினையும் பகிர்ந்து கொண்டார். வழிபாட்டினைத் தொடர்ந்து சபைமக்கள் எல்லோரும் இரவு உணவில் கலந்து கொண்டார்கள்.

*- DSM*

## திடப்படுத்தல்...

(09ஆம் பக்க தொடர்ச்சி)

ஏஞ்சல் சகானா செல்லத்துரை, சாம் சந்தோஸ் செல்லத்துரை, லியோர அபிராமி பிரபாகரன், குளோறியா ஆராதனா பிரபாகரன், ஜோன்சன் மேரி நிக்ஷலா ஆகிய



06 பேரும், அருட்பணி. ஏ. பி. தேவதாஸ் ஏழாலை வடக்கு சி. ஏ. சி. எம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் 02.11.2025 அன்று நடைபெற்ற திடப்படுத்தல் வழிபாட்டில் திருமதி. ஏஞ்சலின் பிரியா ஜனந்தன் அவர்களும் திடப்படுத்தல் பெற்று திருச்சபையின் முழு அங்கத்தவரானார்கள். திடப்படுத்தல் பெற்று கர்த்தரின் பந்தியில் இணைக்கப்பட்டவர்களை இறை நம்பிக்கையில் மென்மேலும் வளர வாழ்த்துகிறோம்.

## தெல்லிப்பளையில் திருச்சபையின் மண்டப திறப்பு விழா

கிறிஸ்து இயேசு உயிர்த்த நாளான கடந்த 05.04.2026, ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பளையில் அமைந்துள்ள, ஏறத்தாழ 400 வருடங்கள் பழமை வாய்ந்த தேவாலயத்துக்கு அருகில், யுத்தத்துக்கு முற்பட்ட காலம் அமைந்திருந்த அதே இடத்தில் புதிதாகக் கட்டப்பட திருச்சபை மண்டபம் (Parish Hall) CACM திருச்சபையின்



தலைவர், செயலாளர், பொருளாளர், முன்னாள் யாழ் பிராந்தியத் தலைவர், தந்தை செல்வா அவர்களின் பேரன் ஆகியோரது முன்னிலையில் மங்களகரமாகத் திறந்து வைக்கப்பட்டது.

அன்று காலை நடைபெற்ற திடப்படுத்தல் வழிபாட்டின் பின்னர் யாழ் பிராந்தியத்தினுடைய முன்னாள் குருமுதல்வர் அருட்பணி. எம். டி. போல் சுரேஸ் அவர்களின் மங்களப் படைப்பு இறைவேண்டலின் பின்னர் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்களும் திருச்சபையின் பொருளாளர் திரு. என். கே. ரமேஸ்குமார் அவர்களும் நினைவுக்கல்லைத் திரைநீக்கம் செய்து "பிதா, குமாரன், பரிசுத்தாவி" யின் திருப்பெயரால் மண்டபத்தினைத் திறந்து வைத்தனர்.

திருச்சபையின் அருட்பணியாளர் அருட்பணி. ஏ. கமலகுமாரன் தலைமையில் பொதுக்கூட்டம் சபை மண்டபத்தில் நடைபெற்றது. இப் பொதுக்கூட்டத்தில் தலைமையுரையினை சபைக்குருவும் ஆசியுரையை



அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்களும் வாழ்த்துரைகளை அருட்பணி. ஏ. பி. தேவதாஸ், திரு. என். கே. ரமேஸ்குமார், மற்றும் சட்டத்தரணி இளங்கோவன் ஆகியோரும் வழங்கினர். திருமதி. ஞானதீபம் இராசகாந்தன் அவர்கள் கட்டிடத்திற்கான நிதியறிக்கையை சமர்பிக்க, திரு. ஆர். சுஜந்தன் அவர்கள் நன்றியுரையினை வழங்க ஐக்கிய காலை ஆகாரத்துடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

*- AST*

## தேவாலயத்தின் மீள் புனரமைப்பும் பிரதிஸ்டை வழிபாடும்

கடந்த 2025 டிசம்பர் 30ம் திகதி தெகிவளையில் அமைந்துள்ள அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபைத் தேவாலயத்தின் பலிபீடப்பகுதி பாரம்பாரிய முறைப்படி



மறுபக்கத்துக்கு மாற்றியமைக்கப் பட்டது. திருமணம் போன்ற வைபவங்களுக்கு வசதியாகவும், வழிபாட்டையும் வழிபாட்டுப் பகுதியையும் உள்நுளைவோர் இடையூறின்றி ஆலயத்தினுள் பிரவேசிப்பதற்கு அமைவாக புனரமைக்கபட்டு, அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் செயலாளர் அருட்பணி. ஏ. பி. தேவதாஸ் அவர்களினால் இளைப்பாறிய மூத்த அருட்பணி யாளர்களான அருட்பணி. வி. ராஜ்குமார், மற்றும் அருட்பணி. ஜே. ஞானப்பிரகாசம் ஆகியோருடைய பிரசன்னத்துடனும் ஒன்றிணைந்து பிரதிஸ்டை செய்யப்பட்டது. வழிபாடு நிறைவில் காலை ஐக்கிய ஆகாரம் அனைவருக்கும் பகிரப்பட்டது.



*- AST*

# ஆழ்ந்த இரங்கல்கள்



எமது அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் சேவைப் திருப்பணி மன்ற இணைப்பாளரான திரு. ரி. யூதராஜா அவர்களின் தாயார் **இராசாம்மா தம்பிராசா** 29.06.2026 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.



எமது அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை யாழ் பிராந்தியத்தின் முன்னாள் பொருளாளர் திருமதி. ஆர். நளாயினி அவர்களின் தாயார் **வேலு தங்கம்** 06.04.2026 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.



எமது அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் பொருளாளராகிய கலாநிதி. என். கே. ரமேஸ்குமார் அவர்களின் தாயார் **சோபிதமணி நவநேசராஜா** 28.03.2026 அன்று கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார்.



எமது அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் அருட்பணியாளரான அருட்பணி. கே. அன்ரூ ஜெயானந்தம் அவர்களின் தாயார் **ஜெயமணி கிருஷ்ண பிள்ளை** 13.02.2026 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.



எமது அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் அருட்பணியாளரான அருட்பணி. ரி. டானியல் ரஞ்சித் அவர்களின் தாயார் **எலிசபேத் அற்புதமலர் தனராஜசிங்கம்** 28.11.2025 அன்று கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார்.

பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்ப உறவுகளின் ஆறுதலுக்காகவும் நித்திய இளைப்பாறுதலுக்காகவும் உதயதாரகையாகிய நாமும் இறைவனிடம் மன்றாடுகின்றோம்.

## கள அனுபவப்...

(03ஆம் பக்க தொடர்ச்சி)

நடைபெற்ற ஞாயிறு ஆராதனையிலும் பங்கேற்று, ஊழியப் பணியிலும் இணைந்தனர்.

கிறிஸ்த சேவ ஆசிரமத்தில், ஆசிரமத்தின் சேவகரான அருட்பணி. ஜெரோம் அண்ணன் அவர்கள், இந்திய மரபுச் சார்ந்த கிறிஸ்தவ ஆராதனை மற்றும் வழிபாட்டு முறைகளை அறிமுகப்படுத்தியதுடன், வடக்கு மற்றும் கிழக்கு இலங்கையில் உள்ள சில புரொட்டஸ்தாந்து திருச்சபைகளில் நடைமுறையில் உள்ள திருமணமில்லா மேய்ப்புப் பணியின் (Celibate Pastoral Ministry) சிறப்புகளையும் விளக்கினார். அவரது விளக்கவுரை, அப்பகுதியில் கிறிஸ்தவ ஊழியம் எவ்வாறு பண்பாட்டு மற்றும் சூழல்சார் தன்மைகளுடன் இணைந்துள்ளது என்பதை மாணவர்கள் ஆழமாகப் புரிந்துகொள்ள உதவியது.

சனிக்கிழமை காலை, அருட்பணி. ஐ. ராஜ்குமார் அவர்கள், யாழ்ப்பாணத்தில் சமயங்களுக்கு இடையேயான மன்றம் (Interfaith Forum of Jaffna) குறித்து கலந்துரையாடல் அமர்வொன்றை நடத்தினார். வட மாகாணத்தில் அரசியல் நல்லிணக்கம், சமூக மறுசீரமைப்பு மற்றும் நீதியை அடிப்படையாகக் கொண்ட அமைதியைக் கட்டியெழுப்புவதில் இம்மன்றம் ஆற்றிவரும் முக்கிய பங்களிப்புகளை அவர் எடுத்துரைத்தார். அன்று மாலை, அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் (CACM) தலைவரான அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள், அமெரிக்கன் சிலோன் மிசனின் வரலாறு மற்றும் கல்வி, சுகாதாரம், சமூக முன்னேற்றம் மற்றும் இலங்கை சமூக வாழ்க்கையில் அது ஆற்றிய நிலையான பங்களிப்புகள் குறித்து விரிவாக உரையாற்றினார்.

ஞாயிற்றுக்கிழமை மாலை, CTS அதிபர் மாணவர்களுக்காக சகோதரத்துவ இரவு விருந்தை ஏற்பாடு செய்தார். அந்தச் சந்திப்பில், இலங்கையின் உள்நாட்டுப் போரால் இன்னும் ஆறாத காயங்கள் சமூகத்தில் ஏற்படுத்தி வரும் தாக்கங்கள் பற்றியும், நல்லிணக்கத்தை முன்னெடுப்பதில் சிங்கள மற்றும் தமிழ் கிறிஸ்தவ சமூகங்கள் ஏற்க வேண்டிய பொறுப்புகள் பற்றியும் ஆழமான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. மேலும், அமைதியைக் கட்டியெழுப்பும் பணியைத் தனது ஊழியத்தின் அத்தியாவசிய பரிமாணமாக இலங்கை திருச்சபை போதுமான முக்கியத்துவத்துடன் முன்னெடுத்து வருகிறதா என்ற கேள்வியையும் பங்கேற்பாளர்கள் சிந்தனைக்குட் படுத்தினர்.

இந்தக் கள அனுபவப் பயணம், சூழல்சார் இறையியல் கல்வி, பண்பாட்டிடை உறவுகள் மற்றும் நல்லிணக்க ஊழியம் ஆகிய துறைகளில் இறைப்பணிப் பயிற்சி மாணவர்களுக்கு அரிய அனுபவங்களையும் ஆழமான புரிதலையும் வழங்கியது. மேலும், விசுவாசம், நீதி, அமைதி மற்றும் மதங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பு ஆகியவற்றைப் பற்றிய சிந்தனையை ஊக்குவித்ததுடன், இலங்கையின் இறையியல் கல்வி நிறுவனங்களுக்கிடையேயான உறவுகளையும் வலுப்படுத்தியது.

இந்நிகழ்ச்சியின் அனைத்து ஏற்பாடுகளையும் போக்குவரத்து, தங்குமிடம், விருந்தோம்பல் உள்ளிட்டவற்றை சிறப்பாக ஒருங்கிணைத்து நிகழ்ச்சியின் வெற்றிக்கு பெரும் பங்களிப்பை வழங்கிய மாணவர் நலன்துறைக் காப்பாளர் அருட்பணி. டானியல் ரஞ்சித் அவர்களுக்கு CTS தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

மேலும், இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர்களை அன்புடன் வரவேற்று, தாராளமாக ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து திருச்சபைகள், நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கும் CTS தனது இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கிறது. இந்த அனுபவம், எதிர்கால இறைப்பணியாளர்கள் கருணை, நீதி, நல்லிணக்கம் மற்றும் கிறிஸ்துவை மையமாகக் கொண்ட தலைமைத்துவத்துடன் தங்கள் சமூகங்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவை செய்ய ஊக்கமளிக்கும் என நம்பப்படுகிறது.

*- RR*

## அதிதியும் ஐந்து...

(10ஆம் பக்க தொடர்ச்சி)

எனக்கு இதயத்தில் 05 அடைப்புகள் இனங்காணப்பட்டு சத்திர சிகிச்சை செய்யப்பட்டன. இதன் பிற்பாடு எனக்கு MA part II செய்ய நான் முனையவில்லை.



நான் அராலியிலிருந்த போது சிட்டிசன் குழுவில் ஓர் உறுப்பினராக இருந்தேன். அப்போது அருட்பணி. செ. அன்ரனி, அருட்கலாநிதி. டானியல் தியாகராஜாவின் வழிநடத்தலில் முழுப்பலத்துடன் அராலி திருச்சபையை பிடிக்க முனைந்தபோதும் அவர்களால் அராலி திருச்சபையை கைப்பற்ற முடியவில்லை. காரணம் அராலியிலிருந்த இராணுவ அதிகாரி நீதியின்பக்கம் நின்றபடியால் அராலி திருச்சபையை அவர்களால் மேற்கொள்ள முடியவில்லை.

### உயர்கல்வியும் உதவிகளும்

நான் பணியாற்றிய கலாப்பகுதிகளில் ஏற்பட்ட நாட்டு சூழ்சநிலை மற்றும் திருச்சபை சூழ்நிலை காரணமாகவும் இறைபணியில் பெரியளவில் உயர்கல்விக்கான வசதிகள் கிடைக்கவில்லை. பின்னர் கலாநிதி. தர்சன் அம்பலவாணர் அவர்கள் உயர் கல்விக்கான பொறுப்பில் இருந்தால் முறையே Bangarrapert SIBS இல் மூன்று மாத கற்கைநெறி, KGF களபயிற்சி மற்றும் குன்னூர் - ஞாயிறு பாடசாலை நிறுவனம் போன்றவற்றிக்கு கல்வி பயில அனுப்பப் பட்டேன். என்னை B.A (Special) செய்யம்படி ஊக்குவித்து உதவி செய்த குருமாருக்கும் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.



### ஓய்வுபெற்ற பின்னும் தொடரும் இறைபணி

நான் இறைபணியிலிருந்து ஓய்ந்த போதிலும் நான் தருணம் கிடைக்கின்ற போதேல்லாம் நற்செய்தியை பிரசங்கிப்பது வழக்கம். உடுவில், அராலி, உரும்பிராய், ஏழாலை தெற்கு, கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம் போன்ற இடங்களில் வழிபாடுகளை நடாத்தி அருளுரைகளை பிரசங்கித்து வருகின்றேன். அத்தோடு மாலை நேரங்களில் ஆங்கிலம் கற்பிப்பதோடு வீட்டுத்தோட்டம் செய்வதில் ஈடுபட்டுள்ளேன்.

## காரைநகர் திருச்சபையின்...

(04ஆம் பக்க தொடர்ச்சி)

அருட்பணி. சுதாசினி சுதாகரன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற வழிபாட்டில், சி.ஏ.சி.எம் செயலாளர், யாழ். பிராந்தியக் குருமுதலவர் அருட்பணி. எம். டி. போல்சுரேஸ், கிறிஸ்தவ இறையியல் கல்லூரி முதல்வர் அருட்பணி. ஏ. கமலகுமாரன் ஆகியோர் பங்கேற்றனர். யாழ்ப்பாணக் கல்லூரி உப அதிபரான அருட்பணி. பி. தேவமித்திரன் பஜனை பாடினார். திருச்சபைத் தலைவர் அவர்கள் அருளுரையாற்றி திருவிருந்து வழிபாட்டினையும் நடாத்தினார். தொடர்ந்து கலை நிகழ்வுடனும், பொதுக் கூட்டத்துடனும் நிகழ்வு முழுமை பெற்றது. மதிய உணவும் உவப்புடன் பரிமாறப்பட்டது.

*- ABT*

## IKC குழுவினருடைய...

(03ஆம் பக்க தொடர்ச்சி)

ஞாயிறு 25ம் திகதி வழிபாட்டினைத் தொடர்ந்து இவர்கள் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம், மானிப்பாய் கிறீன் வைத்தியசாலை, மானிப்பாய் தேவாலயம், பண்டத்தரிப்பு தேவாலயம், உடுவில் மகளீர் கல்லூரி, உடுவில் மிசன் கல்லறைத் தோட்டம், தெல்லிப்பளைத் தேவாலயம், தெல்லிப்பளைத் மிசன் கல்லறைத் தோட்டம், காரைநகர் தேவாலயம், ஊரியில் நடைபெறும் பணிகள் என்பவற்றைப் பார்வையிட்டதுடன் ஆங்காங்குள்ள பணியாளர்களையும் இறைமக்களையும் சந்தித்து அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

மறுநாள் திங்கள் இவர்கள் முகமாலையில் இயங்கும் கண்ணி வெடி அகற்றும் "HALO Trust" நிறுவன உயரதிகாரிகளையும் பணியாளர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் மிதிவெடியகற்றும் பணிகளையும் நேரடியாகக் களத்துக்குச் சென்ற பார்வையிட்டனர். பின்னர் யாழ் பிராந்தியக் குருமாரையும் கிறிஸ்தவ இறையியல் கல்லூரிக் குடும்பத்தினையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

செல்வாய் 27ம் திகதி மட்டக்களப்புக்கு விஜயம் செய்த இவர்கள் போகும் பாதையில் முள்ளிவாய்க்கால் சம்பவங்களைக் கண்டறிந்து கொண்டதுடன் மறுநாள் சுனாமி நினைவாலயம், ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் நினைவிடம், காத்தான்குடி பள்ளிவாசல், பெரியநீலாவணை பெண்கள் இல்லம், பரி யோவான் ஆண்கள் இல்லம், வாலிபர் தலைமைத்துவப் பயிற்சி மாணவர்கள் (YLP) தொழிற்பயிற்சி நிலையம் (VTC) ஆகிய பணிக்களங்களைத் தரிசித்ததுடன் கலந்துரையாடல்களையும் மேற்கொண்டனர். கிழக்கு மாகாணத்தில் பணியாற்றும் குருமாரையும் இவர்கள் சந்தித்து, அவர்களது அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர். பின்னர் இவர்கள் நுவரெலியாப் பகுதியில் நடைபெறும் பணிகளைப் பார்வையிட்டனர். குறிப்பாக எமஸ்ட், எனிக் ஆகிய பணிக்களங்களைப் பார்வையிட்டதுடன் அங்கு வாழும் மக்களுடையதும் பணியாளர்களுடையதும் அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டனர்.

அதன் பின்னர் கொழும்பு திரும்பிய குழுவினர் தெகிவளையில் உள்ள அமெரிக்கன் சிலோன் மிசனுடைய ஞாயிறு வழிபாட்டில் பெப்ரவரி 1ம் திகதி கலந்து கொண்டனர். அவ்வழிபாட்டில் இறை செய்தியினை IKC யினுடைய இலங்கைக்கான இணைப்பாளர் அருட்பணி. சேரா அவர்கள் பகிர்ந்து கொண்டார். மேற்படி IKC அணியினருடய வருகையானது எமக்கும் திருச்சபைப் பணிகளுக்கும் அதிக உந்துதலைக் கொடுத்துள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் இணைந்து இலங்கையிலும் அமெரிக்க தேசத்திலும் பணியாற்றவும் அனுபவங்களையும் வளங்களையும் பகிர்ந்து கொள்ளவும் அதிக வாயில்களைத் திறந்துள்ளது.

இவர்களுடைய வருகைக்கான உதவிகளையும் ஆலோசனைகளையும் திரு. பிரிவின் ஜோசப், திரு. N. K. ரமேஸ்குமார், கலாநிதி. தர்சன் அம்பலவாணர், CACM அலுவலர்கள், பிராந்தியக் குரு முதல்வர்கள், அருட்பணியாளர்கள், இறையியல் கல்லூரி குடும்பத்தினர், மத்திய அலுவலகப் பணியாளர்கள், ஆகியோர் மேற்கொண்டருந்தனர் என்பது இங்கு குறிப்படத்தக்கது. *- AST*

## தெல்லிப்பளை முன்னோர்களின் ...

(01ஆம் பக்க தொடர்ச்சி)

சென்று மலர்ச்செண்டு வைத்து அகவணக்கத்துடன் மரியாதை செலுத்தினர்.

ஞாயிறு வழிபாட்டினை சபையின் அருட்பணியாளர் அருட்கலாநிதி. ராஜன் றோகான் வழி நடத்தினார். திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன், முன்னாள் திருச்சபைத் தலைவர் அருட்பணி. ரி. தேவநேசன், அருட்பணி. ரி. டானியல் ரஞ்சித் மற்றும் இறையியல் கல்லூரி சமூகத்தினர், யாழ்ப்பாண கல்லூரி அதிபர் திருமதி. ருசிறா குலசிங்கம், யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுநர் மன்ற தலைவர் செல்வி. வாசுகி ராஜசிங்கம், யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுநர் மன்ற செயலாளர் திரு. ராஜேந்திரா ரற்றிக்கேஸ் ஆகியோர் பங்கு பெற்றினர்.

அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் முன்னாள் அருட்பணியாளரும் யாழ்ப்பாண கல்லூரி நம்பிக்கை நிதியத்தின் புதிய அறங்காவலர் உறுப்பினரான அருட்பணி. எம். யூட் சுதர்சன் அருளுரை ஆற்றினார். அவரது செய்தியில் "தெல்லிப்பளைத் திருச்சபை விசுவாசிகளின் நம்பிக்கை மற்றும் நம்பிக்கை சார்ந்த வாழ்வியல் முறை என்பன ஏனைய திருச்சபை மக்களுடைய விசுவாச வாழ்க்கைக்கு முன்மாரியாக அமைந்துள்ளது. பல தசாப்தங்களாகத் தெல்லிப்பளையில் நிலை கொண்டிருந்த இராணுவ ஆக்கிரமிப்பினால் அப்பகுதி மக்கள் வலிந்து இடம் பெயர்ந்து பிற ஊர்களுக்கும் பிற நாடுகளுக்கும் சென்று விட்டனர். ஆனாலும் நாம் மீண்டும் இவ்வாலயத்தில் ஒன்று கூடிக் கடவுளை வழிபட அருள் செய்வார் என்ற நம்பிக்கை நிறைவேறியுள்ளதை நாம் இன்று எமது கண்களினால் காண்கிறோம். தெல்லிப்பளை சபை விசுவாசிகளுக்கூடாக எமது வரலாற்றில் சொல்லப்பட்ட கடவுள் பெரியவர்; அவர் எப்பொழுதும் நம்பத்தக்கவர்" என கூறினார்.

யாழ்ப்பாணக் கல்லூரி நம்பிக்கை நிதியத்தின் செயலாளர் அருட்பணி. ஜோன் அலன் தனது வாழ்த்துரையில், "யாழ்ப்பாண மக்களுக்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கின்றோம். அவர்கள் தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு இலங்கை தேசத்தில் தேவையில் உள்ளவர்களுக்கு உதவி செய்யவும் அவர்களை கல்வியிலும் ஆளுமையிலும் வளத்தெடுக்கவும் எமக்குத் துணையாகவும் வழிகாட்டுபவராகவும் இருக்கின்றனர். அவர்களுடைய நம்பிக்கையும் மீளெழுச்சி திறனும் கொண்ட வாழ்வு சமகால விசுவாச வரலாற்றை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது "எனக் குறிப்பிட்டார்.

தெல்லிப்பளை சபையின் மூப்பர்கள், உறுப்பினர்கள் ஒன்றிணைந்து அன்றைய வழிபாட்டிற்கும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வரவேற்பு நிகழ்வும் தமது பங்களிப்பைச் சிறப்புற செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. *- RR*

## 14வது பொதுப்பேரவை...

(01ஆம் பக்க தொடர்ச்சி)

நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து ஐக்கிய தேநீர் ஆச்சிரம வளாகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இவ்ஐக்கியத்தின் பின், பேரவைக் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரும், கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் ஒன்றுகூடினர். கூட்டம் தொடங்குவதற்கு முன்பதாகப் பதிவுச் செயலாளர்களாக அருட்பணி. பியூறா செல்வகுமார் அவர்களும் திரு. ரி. யூதராஜா அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். பின்னர் 99 பேரின் வரவுடன் கூட்டம் காலை 10.30 மணிக்கு இனிதே ஆரம்ப மானது. கூட்டத்தின் முதல் நிகழ்வாக "ஆழத்திற்குப் போவோம்" என்ற தலைப்பில் திருச்சபைத் தலைவரினால் தலைமையுரை நிகழ்த்தப்பட்டது. இந்நிகழ்விற்குப்பின் அருட்பணி. வி. என். தர்மகுலசிங்கம் மற்றும் ஏழாலை வடக்கைச் சேர்ந்த செல்வி. என். ரெபேக்கா ஆகியோருக்கு அஞ்சலிகள் செலுத்தப்பட்டு இறைவேண்டல் செய்யப்பட்டது. தொடர்ந்து, 13வது பொதுப் பேரவைக் கூட்ட அறிக்கை மற்றும் அனைத்துச் செயற்குழு அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன. பின்னர், பிராந்திய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன. மதிய உணவு தொடர்ந்து பொருளாளரின் கணக்கறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.



இரண்டாம் நாள் கூட்டம் காலை வழிபாட்டுடன் ஆரம்பமானது. கடவுளின் வார்த்தையினை இரட்சணிய சேனையின் வடக்கிற்கான அதிகாரி, கேப்டன். சிவகுமார் அவர்கள் "ஆழத்திற்குப் போவோம்" என்ற தலைப்பில் மிகவும் சிறப்பாக வழங்கினார். தொடர்ந்து 91 பேரின் வரவுப் பதிவுடன் கூட்டம் ஆரம்பமானது.

வாலிபர் தலைமைத்துவ திட்டம் (Youth Leadership Program -YLP) அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. குறிப்பாகக் கிழக்குப் பிராந்தியத்தில் இருக்கின்ற சமூகக் கல்லூரிக்கு (Community College) "Kandal (கண்டல்) Community College" என்று பெயர் வைப்பது தொடர்பாக பேசப்பட்டது. கண்டல் தாவரமென்பது சதுப்பு நிலங்களி வாழுகின்ற ஒரு தாவரமாக இருந்தாலும் வரட்கியிலும் பல சிறப்பான பண்புகளைக் கொண்டு வளருகின்ற ஒரு தாவரமாகும். தொடர்ந்து, பரி. யோவான் தொழிற்பயிற்சி நிலையத்தின் அறிக்கை, வன்னிமிசன் அறிக்கை, கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் அறிக்கை, சமயக் கல்விக் குழுவின் அறிக்கை மற்றும் சேவைத்திருப்பணி மன்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து புதிய செயற்குழுவிற்கான உறுப்பினர்கள் அனைத்துப் பிராந்தியங்களில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்டனர். அதனைத் தொடர்ந்து முன்னாள் பிராந்திய தலைவர்களுக்கு நன்றிகூறி அவர்களைக் கௌரவித்ததோடு, புதிய பிராந்தியத் தலைவர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்கும் நிகழ்வும் நடைபெற்றது. 25 வருட பணிக்கால பூர்த்தியை முன்னிட்டு அருட்பணி. கே. அன்ரூ ஜெயானந்தம் அவர்களைக் கௌரவித்ததுடன் நினைவுச்சின்னமும் வழங்கப்பட்டது. மேலும், புதிய அருட்பணிளார் களை ஏற்றுக்கொள்ளும் நிகழ்வும், அத்துடன் அருட்பணியாளர்களுக்கான பணிக்கால நீடிப்பும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அத்துடன் அடுத்த வருடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியில் இருந்து வெளியேறும் மாணவனான சகோ. என். அன்ரூ நிலுக்ஷன் அவர்களும் பொதுச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

இறுதியாக, அருட்பணி. ஏ. பி. தேவதாஸ் மற்றும் அருட்பணி. எஸ். ஜோன் புவியரசன் ஆகியோரால் அனைவருக்கும் நன்றிகள் கூறப்பட்டு 14வது பொதுப் பேரவைக் கூட்டம் மிகவும் சிறப்பாகவும் அமைதியாகவும் அருட்பணி. ஆர். ஜோய் பிரதீப்குமார் அவர்களின் செபத்துடன் இனிதே நிறைவுற்றது. *- BS*

## நன்றி செலுத்தும் வழிபாடு



கர்த்தருக்குள் நித்திரையடைந்த திருமதி. வேலு தங்கம் அவர்களின் வாழ்வுக்கும் பணிக்குமான நன்றி செலுத்தும் வழிபாடு உடுவிலிலுள்ள அவரது மகளின் இல்லத்தில் 30.05.2026 சனிக்கிழமை மாலை 05 மணிக்கு உடுவில் திருச்சபைக் குரு அருட்பணி. எம். டி. போல்சுரேஸ் தலைமையில் நடைபெற்றது. இவ் வழிபாட்டில் அருட்பணி. டி. எஸ். மதியாபரணம் மறையுரை ஆற்றினார்.

வேலு தங்கம் மாங்குளம் திருச்சபையின் பக்தியான ஒரு குடும்பத் தாயாக விளங்கியவர். இவரது மகள் திருமதி. ஆர். நளாயினி யாழ் பிராந்திய பொருளாளராக பணியாற்றினார். கடைசியாக நடைபெற்ற சி.ஏ.சி.எம் திருச்சபையின் பொதுப் பேரவையில் யாழ் பிராந்தியப் பெண்கள் சார்பில் செயற்குழு அங்கத்தவராக தெரிவு செய்யப்பட்டவர். இவ் வழிபாட்டில் சி.ஏ.சி.எம் இன் முன்னாள் தலைவர் அருட்பணி. ரி. தேவநேசன் நினைவுரையைப் பகிர்ந்து கொண்டார். இறுதி ஜெபத்தையும் ஆசீர்வாதத்தையும் சி.ஏ.சி.எம் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் வழங்கினார். கலந்து கொண்ட யாவருக்கும் இரவுணவு பரிமாறப்பட்டது. *- DSM*

## ஆழத்திற்கு போவோம்..

(01ஆம் பக்க தொடர்ச்சி)

விதைகள் முளைக்கின்றபோது காணப்படுகின்ற மண்ணின் மேற்பகுதி இலகுவானது: அழகானது: மென்மையானது: காற்றின் மென்மையான அசைவினைத் தழுவக் கூடியது: சூரிய ஒளியினையும் மழை நீரையும் தழுவக் கூடியது. விருட்சம் வளர்ந்து உறுதியுடன் நிற்க வேண்டுமென்றால் மரத்தின் வேர்கள் ஆழத்துக்குப் போக வேண்டும். ஆனால் அவ்விருட்சத்தின் வேர்கள் ஆழத்துக்குப் போவதென்பது இலகுவான காரியமல்ல. நிலத்தின் அடியில் இருக்கின்ற கல்லுகளையும், இறுக்கமான மண்ணின் கட்டுமானங்களையும் ஊடுருவிச் செல்லுவதென்பது மிக மிகக் கடினமானது. இவ்வளவு கடினப்பாடுகளையும் சவால்களையும் தாண்டிச் சென்று கனியுப்புக்களையும் நன்நீரையும் அகத்துறிஞ்சி அதனை அறுபது அடிகளுக்கும் மேற்பட்ட உயரத்துக்கு அனுப்புகின்ற பொறிமுறையினை இந்த மென்மையான வேர் செய்கின்றதென்றால் அதற்கு மிகவுயர்ந்த நோபல் பரிசு கொடுக்க வேண்டும்.

மென்மையான வேர் எப்படி கடினமான கற்களை உடைக்கின்றது: கடினமான கற்களை எப்படி ஊடுருவிச் செல்லுகின்றது. பல சந்தர்ப்பங்களில் இதைக் குறித்து நான் எண்ணிப்பார்த்து வியந்திருக்கின்றேன். யாரும் அறியாமல் அமைதியிலே வேர்கள் செய்கின்ற இந்தச் செயற்பாடுதான் ஒரு மரத்தை பல நூறு வருடங்களுக்குப் பயனுள்ளதாக நிமிர்ந்து நிற்க உதவுகின்றது. இதே போன்றுதான் திருச்சபையும், திருச்சபையின் ஒவ்வொரு நிறுவனங்களும், திருச்சபையின் ஒவ்வொரு அலகுகளும், ஒவ்வொரு அருட்பணியாளரும், தலைமைத்துவத்தினை ஏற்றுச் செயற்படுகின்ற ஒவ்வொருவரும், திருச்சபையின் ஒவ்வொரு தனிநபர்களும்கூடத் தத்தம் சூழல்களிலே காணப்படுகின்ற சவால்களையும் கடினப்பாடுகளையும் தாண்டி ஆழங்களுக்குப் போய் வளங்களையும் கனியங்களையும் அறிவையும் தேடிக்கொள்ள வேண்டும். அப்போதுதான் அந்த நிறுவனங்களும், தனிநபர்களும் உறுதியுடன் நீண்டகாலம் நிலைத் திருந்து பயன் கொடுக்கமுடியும்.

இங்கே இன்னுமொரு வித்தியாசமான சந்தர்ப்பம்:

*"ஆழத்திலே தள்ளிக் கொண்டு போய் மீன் பிடிக்க உங்கள் வலைகளைப் போடுங்கள்"*

லூக்கா நற்செய்தி நூலின்படி, இயேசு இந்த வார்த்தையினைப் பேதுருவுக்கும் அவனுடைய நண்பர்களுக்கும் கெனசரேத்துக் கடலருகே நின்றபடி கூறினார். இந்தக் கெனசரேத்துக் கடல் என்பது திபேரியாக் கடலென்றும் கலிலேயாக் கடலென்றும் அழைக்கப்படுகின்றது. இது கடல் மட்டத்தில் இருந்து 210 மீற்றர் தாழ்விலே காணப்படுகின்றது. இயேசுவானவர் அவ்விடத்துக்கு வருகின்றார். மக்கள் அவரடைய போதகத்தினைக் கேட்க அங்கே வந்து கூடுகின்றனர். இன்னுமொரு புறத்தில் மீன் பிடிக்கக் கடலுக்குச் சென்ற பேதுருவும் நண்பர்களும் இரவு முழுவதும் கடலுக்குச் சென்று மீன்பிடித்துவிட்டுத் திரும்பி வந்து, மீன்கள் ஒன்றுமே பிடிபடாததினால் மனச் சோர்வுடன் தங்கள் வலைகளை அலசிக் கொண்டிருந்தனர். இயேசு மக்களுக்குப் போதகம் பண்ணி முடித்த பின்னர் பேதுருவையும் அவனது நண்பர்களையும் நோக்கி ***"ஆழத்திலே தள்ளிக் கொண்டு போய் மீன் பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள்"*** என்றார்.

இயேசு சொன்ன இந்தக் கட்டளையினை நாம், சாதாரணமாக ஒரு மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவனுக்கோ அல்லது மீனவருக்கோ சொல்லப்பட்ட ஒரு கட்டளையாகக் கொள்ளக்கூடாது: அப்படியாக இயேசு கட்டளை கொடுத்த தருணமும் ஒரு சாதாரணமான தருணம் அல்ல: மாறாக இது ஒரு உன்னதமான அழைப்பு: கடினமான சவால் நிறைந்த செயற்பாட்டுக்கான ஒரு அழைப்பு: ஒரு விசுவாசப் பயணம்: கரையோரத்தில் காணப்பட்ட பாதுகாப்பில் இருந்து கடவுளுடைய ஆழ்ந்த கிருபைக்குள் செல்லும் ஓர் அழைப்பு: வசதியானதும் சலுகைகள் நிறைந்தது மான ஓர் இடத்திலிருந்து நம்பிக்கையற்றதும் பயங்கரங்கள் நிறைந்ததுமான ஓர் இடத்தினை நோக்கிச் செல்லுகின்ற ஓர் விசுவாசப் பயணம். கீழ்ப்படிவு என்னும் இலக்கணமே இந்த விசுவாசப் பயணத்திற்கு அடிப்படையானது.

### 1. கரையோர வாழ்க்கையினை விட்டு ஆழங்களுக்குச் செல்லுவதற்கான ஓர் அழைப்பு

கரையிலே நிற்பது பாதுகாப்பானது: இரவு முழுவதும் பிரயாசப்பட்டுப் பேதுருவுக்கும் அவன் நண்பர்களுக்கும் மீன்கள் எதுவுமே கிடைக்கவில்லை. மனச்சோர்வு: ஏமாற்றம்: தோல்வி: நம்பிக்கையின்மை - இவைகளுக்கு மத்தியில் இயேசு பேதுருவையும் அவனது நண்பர்களையும் பார்த்து "ஆழத்திலே தள்ளிக் கொண்டு போய் மீன் பிடிக்க உங்கள் வலைகளைப் போடுங்கள்" என்கின்றார். இது சவால்கள் நிறைந்த ஒரு கட்டளை. திருச்சபை இப்போதும் கரையிலே இருக்கத்தான் விரும்புகிறது: தனிமனிதர்களின் விருப்பமும்கூட இதுதான். (We all wanted to be in a comfortable zone) இது மனித இயல்புதான். ஆனால் சாதனைகளுக்குச் சொந்தக்காரராக வேண்டுமென்றால் ஆழத்துக்குப் போகவேண்டும். ஆழம் ஆபத்து மிக்கது: ஆனால் வளங்கள் நிறைந்தது. ஆழம் பாதுகாப்பற்றது: ஆனால் பயத்தை நீக்க வல்லது. நம்பிக்கையுடன் பயணிக்கத் துணிய வேண்டும்.

இன்றும் எமது திருச்சபை பல சவால்களை எதிர்நோக்கி நிற்கின்றது. பொருளாதார நெருக்கடிகள்: அருட்பணியாளர்களுடைய பற்றாக்குறைகள்: இளைஞர்களுடைய விலகல்கள்: சமுதாய மாற்றங்கள்: பெண்கள் மீதான அடக்குமுறைகள்: எதிர்காலம் குறித்த அச்சங்கள் - இவ்வாறு அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் ஆண்டவர் இயேசு நம்மைக் கரையோரத்தில் நிற்கச் சொல்லவில்லை: மாறாக "ஆழங்களுக்குப் போவோம் வாருங்கள்" என்கின்றார்.

### 2. ஆழம் என்பது விசுவாசத்தின் இடம்

கரையோரத்தில் நம்முடைய திறமைகளுடனும் நமக்கு இருக்கும் வளங்களுடனும் வாழ்ந்து கொள்ளலாம். ஆனால் ஆழத்தில் கடவுளுடைய கிருபை மட்டுமே நம்மைத் தாங்கும். ஆழங்களுக்குப் போவதற்குப் பயப்பட்டுக் கரையோரங்களில் வாழ நினைப்பது பயனுள்ள வாழ்க்கையாக அமைந்து விடாது. எமது சி.ஏ.சி.எம் திருச்சபையின் உன்னதமான வரலாறு இதையே சாட்சியமாக எடுத்து இயம்புகின்றது. எம் கண்முன்னே தோன்றுகின்ற, இன்றும் நாம் நன்றியுடன் பேசுகின்ற அமெரிக்கன் மிசன் தொண்டர்கள் தியாகத்தோடும் செபத்தோடும் ஆழங்களை நோக்கிப் போனார்கள். அற்புதமான அருட்பணிகளை எம்மண்ணில் செய்து முடித்தார்கள். இன்னும் பலர் அதனைத் தொடர்ந்து செய்யும்படியான விதைகளை விதைத்தார்கள். இவர்கள் பாதுகாப்பான பாதைகளைத் தெரிந்துகொள்ளவில்லை: கரையோரப் பணிகளுக்கு அப்பால் சென்று பயனுள்ள பணிகளைச் செய்து சாதனைகளுக்குச் சொந்தக்காரரானார்கள். அமைதியாகவும் அடக்கமாகவும் ஆழங்களுக்குப் போனார்கள். ஆண்டவருடைய அன்பின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தார்கள். பயனுள்ள பெரிய பணிகளைச் செய்து முடித்தார்கள். நாம் இன்று எங்கள் மனச்சாட்சியினை தட்டியெழுப்பிக் கேட்க வேண்டிய பல கேள்விகள் உண்டு:

- ■ நாம் இன்று ஆழமான செப வாழ்க்கைக்குள் சென்று வாழ்கின்றோமா?
- ■ நாமும் நமது குடும்பமும் ஆழமான பரிசுத்த வாழ்க்கைக்குள் வாழ்கின்றோமா?
- ■ நற்செய்தி அறிவிப்புக் குறித்த ஆழமான வாஞ்சை நம்மிடம் உண்டா?
- ■ அருட்பணியாளர்களிடம் ஆழமான உறவு நிலை நிலவுகின்றதா?
- ■ நாமும் நமது குடும்பமும் ஆழமாக நல்ல பண்புகளில் வேரூன்றி வளருகின்றோமா?
- ■ நாமும் நமது திருச்சபையும் ஆழமாகக் கிறிஸ்தவ விழுமியங்களுக்குள் செயற்படுகின்றோமா?

### 3. ஆழங்களில் அதிசயங்கள் உண்டு

பேதுரு ஆண்டவரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தான், வலைகள் நிரம்ப மீன்களைப் பிடித்துக்கொண்டான், அங்கே ஆழங்களில் ஆசீர்வாதங்கள் காணப்பட்டன. கீழ்ப்படிவு என்பதே ஆசிர்வாதங்களுக்கு அடிப்படையானது. ஆசீர்வாதங்கள் இலகுவானதும் அல்ல: இலவசமானவைகளும் அல்ல. கடவுளின் மேல் கொண்டிருக்கும் விசுவாசத்துடன் கூடிய செயற்பாடு இதற்கு அவசியம் தேவை. இதனையே யாக்கோபு அப்போஸ்தலன் "கிரியையில்லாத விசுவாசம் செத்தது" என்று கூறுகின்றார். திருச்சபைகள் விசுவாசம் கொண்ட புதிய தலைமுறைகளை உருவாக்க வேண்டும். அழிவுகளின் விழிம்புகளில் நின்று அழிவினை எட்டிப் பார்க்கும் பிள்ளைகள் மற்றும் இளைஞர்களைக் காப்பாற்ற வேண்டும். கொழும்பு - மலையகப் பிராந்தியத்தில் காணப்படும் ஊழியங்கள் விஸ்தரிக்கப்பட வேண்டும். கொழும்பு தனிப் பிராந்தியமாகவும் மலையகம் தனிப்பிராந்தியமாகவும் மாற்றம் பெற வேண்டும். மலையகப் பிராந்தியத்தில் செய்யப்படும் ஊழியங்கள் ஆழங்களைத் தொட வேண்டும். ஒவ்வொரு பிராந்தியங்களிலும் நடைபெறுகின்ற கல்வி, மருத்துவ, சமூக மற்றும் ஆன்மீக எழுச்சி போன்றன ஆழங்களுக்குச் செல்ல வேண்டும். அப்போது மட்டுமே நாம் அதிசயங்களைக் கண்டு கொள்ளலாம். வேலைக்குச் செல்ல விருப்பமிலாமல் வீட்டிலேயே இருக்கும் ஒருவர் ஒருபோதும் அதிசயங்களைக் காணமுடியாது. கடவுள் அதிசயமானவர்: அதிசயங்களைக் காணச் செய்வார். அதிசயங்களைத் தன் வாழ்வில் காணுவதற்கு வாஞ்சையுள்ளவன் மாத்திரமே அதிசயங்களைக் கண்டு கொள்ளுவான். அதற்கு ஆழங்களுக்குப் போகத் துணிவுடன் புறப்பட வேண்டும். அங்குதான் அதிசயங்கள் காணப்படும்.

### 4. ஒன்றுபட்டு ஆழங்களுக்குச் செல்லவேண்டிய திருச்சபை

இந்த அழைப்புத் தனி நபர்களுக்கானது மட்டுமல்ல: முழுத் திருச்சபைக்குமானது. போதகர்மார், சபைத் தலைவர்கள், வாலிபர்கள், சிறுவர்கள், பெண்கள், பிறநாட்டு அன்பர்கள், அமைப்புக்கள், சங்கங்களென அனைவரும் இணைந்து அந்த அந்தத் துறைகளில் ஆழங்களை நோக்கிப் பயணிக்க வேண்டும். திருச்சபை ஒன்றுதான். ஆண்டவர் இயேசு விரும்பிய, கனவு கண்ட, ஆழங்களில் உள்ள அந்தத் திருஅவையினை நோக்கி நாம் அனைவரும் பயணிக்கும்போதே அதிசயங்களைக் கண்டுகொள்ள முடியும்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே! கரையோரங்களில் இருப்பது பாதுகாப்பானதுதான். அத்துடன் அது எளிதானதும்கூட. கரையோரங்களில் இருப்போர் "அனலுமின்றிக் குளிருமின்றி இருப்பவர்கள்" போன்றவர்கள். கடவுள் அவர்களை வாந்தியெடுத்துப் போடுவதாக வேதத்திலே வாசிக்கின்றோம். ஆழங்களுக்குச் செல்லும் விசுவாசிகளையே கடவுள் மிக அதிகமாகப் பயன்படுத்துகின்றார். நாம் வாழப்போவது ஒரு சொற்ப காலம் மட்டுமே. நாம் எத்தனை வருடங்கள் வாழ்ந்தோம் என்று கணக்கிட்டுக் கொள்ளுவதை விடுத்து, வாழ்ந்த காலத்தில் என்னத்தைச் சாதித்தோம் என்று மீட்டுப் பார்ப்பதே மேலானது.

ஆகையினால் இன்று நாம் உறுதியெடுத்துக் கொள்ளுவோம். "வாருங்கள் ஆழங்களுக்குப் போவோம்" செபத்தின் ஆழத்துக்கு: பரிசுத்தத்தின் ஆழத்துக்கு: அன்பின் ஆழத்துக்கு: இறைபணியின் ஆழத்துக்கு: கடவுளுடைய சித்தத்தின் ஆழத்துக்கு: முன்மாதிரியான குடும்ப வாழ்வின் ஆழத்துக்கு: ஒற்றுமையின் ஆழத்துக்கு: மன்னிப்பின் ஆழத்துக்குப் போவோம் வாருங்கள். கடவுள் தாமே அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையையும் அதன் பணிகளையும் மென்மேலும் ஆசீர்வதிப்பாராக.

# திருமறையின் வரலாற்றில் இடம் பிடித்த பெண்கள்

சிபில் தேவகி ஞானபிரகாசம்

## இயேசுவின் தாயாகிய மரியாள்
## (Mary, Mother of Jesus)

பலஸ்தீனாவிலே வாழ்ந்த யூதர்கள் மத்தியிலே மரியாள் என்ற பெயர் மிகவும் பிரபல்யமாக விளங்கியது. மரியாள் என்ற இப்பெயரானது கிரேக்க மொழியிலே **“மரியாள்”** என்றும் எபிரேய மொழியிலே **“மிரியாம்”** என்றும் உச்சரிக்கப்படுகின்றது. புதிய ஏற்பாட்டிலே 5 பெண்கள் **“மரியாள்”** என்ற பெயரிலே குறிப்பிடப்படுகின்றனர்.



01. **இயேசுவின் தாயாகிய மரியாள்** (Vergin Mary)
02. **மகதலேனா மரியாள்** (Mary Magdalene)
03. **பெத்தானியா மரியாள்** (Mary of Betany)
04. **கிலெயோப்பா மரியாள்** (Mary of Cleophas)
05. **மாற்குவின் தாய் மரியாள்** (Mother of Mark)

இயேசுவின் தாயாகிய மரியாள், எருசலேம் நகரிலே உள்ள பெத்லகேம் என்ற ஊரினைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த இவளுடைய சொந்தவீடு எருசலேம் நகரத்துக்குள் பெதஸ்தா குளத்துக்கு அருகாமையில் அமைந்திருந்தது. அவளுடைய வீடு இருந்த இடத்திலே இன்று ஒரு பெரிய தேவாலயம் அவள் நினைவாக கட்டப்பட்டுள்ளது. அத்தேவாலயம் “Church of our Lady Mother” என அழைக்கப்படுகின்றது. இன்று பல நாடுகளில் இருந்து வரும் யாத்திரிகர்கள் இவ்விடத்தினைப் பக்தியுடன் தரிசித்துச் செல்லுகின்றனர். மரியாள் என்ற பெயருடன் வாழ்ந்த மேற்கூறப்பட்ட பெண்கள் ஐவரிலும் ,யேசுவின் தாயாகிய மரியாளுக்கு கிறிஸ்தவ திருச்சபையின் வரலாற்றிலே மிக முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

பெத்லகேமிலே பிறந்து வளர்ந்த மரியாள் பொருளாதார ரீதியிலே நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவளாக இருந்தபடியினால் நகர வாழ்க்கையினைத் துறந்து, கலிலேயாவுக்குச் சென்று, நாசரேத்து என்னும் ஊரிலே வசித்து வந்தாள். மரியாளுடைய பெற்றோருடைய பெயர் புதிய ஏற்பாட்டிலே எங்கும் குறிப்பிடப்பட வில்லை. இவள் நாசரேத்திலே வாழ்ந்து வருகின்றபோது, அங்கு தச்சுத் தொழிலினைச் செய்து வந்த யோசேப்பு என்பவருக்குத் திருமண நிச்சயம் செய்யப்பட்டிருந்தாள். இவர்கள் இருவரும் கூடி வாழுவதற்கு முன்பதாகவே ஒருநாள் காபிரியேல் என்னும் தேவதூதன் மரியாள் இருந்த அறையிலே தோன்றி “கடவுளுடைய மகன் உன்னுடைய வயிற்றிலே பிறப்பார்” என்ற செய்தியினை அறிவித்திருந்தார். அவ்வேளையிலே கர்த்தருடைய தூதன், “உனக்கு உறவு முறையுள்ள எலிசபெத் என்னும் பெண்ணும் தன் முதிர் வயதிலே யூதேயாவில் கர்ப்பம் தரித்திருக்கின்றாள்” என்ற செய்தியினை அறிவித்திருந்தான்.

அதற்குப் பிறகு மரியாள் உடனடியாக யூதேயா தேசத்தின் மலைப் பகுதிக்குச் சென்று 03 மாதங்கள் அவளுக்கு உதவியாக அங்கு தங்கி மறுபடியும் நாசரேத்துக்குத் திரும்பி வந்தபோது, குடிமதிப்பு எழுதப்படவேண்டுமென்று அகுஸ்து இராயனால் கட்டளை பிறந்தது. யோசேப்பு நாசரேத்திலே தச்சுத் தொழிலினைச் செய்து வந்தார். மரியாள் யோசேப்புக்குத் தொழிலிலே உதவியாக இருந்தாள். இருவருக்கும் வயதிலே பெரிய வித்தியாசம் காணப்பட்டது. அத்துடன் யோசேப்பு நீதிமானாகவும் காணப்பட்டான். இவர்கள் குடிமதிப்பு எழுதுவதற்காக நாசரேத்தைவிட்டு யூதேயா நாட்டில் உள்ள பெத்லகேமுக்குப் புறப்பட்டுச் சென்றனர். யோசேப்பினுடைய சொந்த இடமும் பெத்லகேமாக இருந்தபடியினால் இருவருமே கால்நடையாக 3 1/2 நாட்கள் நடந்து பெத்லகேமுக்குச் சென்றனர். பெத்தலகேமை நெருங்கியபோது அவளுக்குப் பிரசவ காலம் நேரிட்டது. அவள் தன்னுடைய முதல் பிள்ளையைப் பெற்றெடுத்து எங்கும் இடம் கிடைக்காமையினால் பிள்ளையைத் துணிகளில் சுற்றி மாட்டுத் தொழுவத்திலே மாடுகளின் தீவனத் தொட்டியிலே (முன்னணையில்) கிடத்தினாள். அவ்வேளையில் இடையர்கள், ஞானிகள் வந்து வாழ்த்தினார்கள்.

இது ஒரு வரலாற்று நிகழ்வு. உலகத்தை மீட்கும் இரட்சகர் மரியாளுடைய வயிற்றிலிருந்து பிறந்ததால் சாதாரண பெண்ணான மரியாள் உலக வரலாற்றிலே புனிதமான ஒரு இடத்தினை பெற்றுக் கொண்டாள். கத்தோலிக்கத் திருச்சபையிலே ஏனைய திருச்சபைகளைவிட மரியாளுக்குச் சிறப்பான, புனிதமான இடம் கொடுக்கப்பட்டுள்ளது. மீட்பர் ஒருவர் பிறந்திருக்கிறார் அவர் யூதர்களுக்கு அரசனாக இருப்பார் என்ற செய்தியை ஏரோது அரசன் கேள்விப்பட்டபோது, இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண் பிள்ளைகளையும் கொலை செய்யும்படி கட்டளையிட்டான். இதன் காரணமாக யோசேப்பும், மரியாளும் குழந்தையைத் தூக்கிக்கொண்டு எகிப்துக்குத் தப்பியோடினார்கள். ஏரோது இறக்கும் வரை எகிப்திலே வாழ்ந்த ,வர்கள், மறுபடியும் ஏரோது ,றந்த பின்னர் நாசரேத்துக்கு மீள வந்து அங்கே வசிக்கத் தொடங்கினார்கள்.

இயேசுவுக்குப் 12 வயதானபோது, வருடம் தோறும் பஸ்காப் பண்டிகைக்குப் போவதுபோலப் பெற்றோர் இயேசுவையும் கூட்டிக்கொண்டு பஸ்காப் பண்டிகைக்கு எருசலேமுக்குப் போனார்கள். பண்டிகை நிறைவுபெற்றுத் திரும்புகின்றபோது, பிள்ளை இயேசு பெற்றோருக்குச் சொல்லாமல் எருசலேமிலே தங்கிவிட்டார். பெற்றோர் பிள்ளையைத் தேடிக்கொண்டு எருசலேமுக்குச் சென்றனர். அங்கு கோயிலில் போதகர்மார் நடுவில் அவரைக் கண்டனர். தாய் மரியாள் பிள்ளையைப் பார்த்து “மகனே! ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்?” என்று கடிந்து கொண்டபோது மகன் இயேசு “நான் என் பிதாவுக்கு அடுத்ததாக இருக்கவேண்டியது என்று உங்களுக்குத் தெரியாதா?”என்று பதிலளித்தார். மரியாள் அதன் ஆழமான அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாதபோதும் (லூக்கா 02:49-50) இவைகள் எல்லாவற்றையும் தன் இருதயத்திலே வைத்து யோசனை பண்ணிக் கொண்டிருந்தாள். (லூக்கா 02:19) இதற்குப் பின்னர் யோசேப்பைப் பற்றிய குறிப்புக்கள் திருமறையில் இல்லை. எனவே வேத அறிஞர்கள் யோசேப்பு இறந்திருக்கவேண்டும் என்றும் மரியாள் விதவையாகி யிருக்கவேண்டும் என்றும் கருதுகின்றனர்.

அதன்பின்னர் இயேசு கானாவூரிலே நடைபெற்ற ஒரு திருமண வைபவத்திலே, தன்னுடைய தாயாரோடு கலந்து கொண்ட ஒரு நிகழ்வைக் குறித்து யோவான் நற்செய்தி ஆசிரியர் குறிப்பிடுகின்றார். அங்குதான் இயேசு தன்னுடைய முதலாவது அற்புதத்தினைச் செய்தார். அதற்குத் தாய் மரியாளும் மிக உதவியாக இருந்தாள். (யோவான் 02:01-11) அதற்குப் பின்னர் மரியாளும் இயேசுவும் கப்பர்நகூமுக்குச் சென்றனர். அதன்பின்னர் இயேசு சீடர்களோடு மக்கள் கூட்டத்தில் நீண்டநேரம் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தார். இந்தச் சந்தர்ப்பத்திலும் இயேசுவைக் காணவில்லையென மரியாள் தன் உறவுகளோடு தேடிக்கொண்டு சென்றாள். இச்செய்தி இயேசுவுக்கு அறிவிக்கப்பட்டபோது இயேசு “யார் எனக்குத் தாய்? யார் எனக்குச் சகோதரர்? என் தந்தையின் திருவார்த்தையை நிறைவேற்றுவோரே எனக்குத் தாயும் சகோதரருமாயிருக்கிறார்கள்” என்று கூறினார். (மத்தேயு 12:46-50, மாற்கு 03:31-35, லூக்கா 08:19-21)

நற்செய்தி நூல்களில், இறுதியாக இயேசுவின் தாய் மரியாளைக் குறித்த செய்திகளைச் சிலுவையண்டையிலேயே காணக்கூடியதாக இருக்கின்றது (யோவான் 19:25-27). இயேசு சிலுவையிலே மரணத்தைத் தழுவுவதற்கு முன்னர் தனக்கு அன்பாக இருந்த சீடனிடம் தன் தாயை ஒப்புக்கொடுக்கின்றார். அந்நேரம் முதல் அந்தச் சீடன் அவளைத் தன் வீட்டில் ஏற்றுக்கொண்டான். (யோவான் 19:25-27) அந்தச் சீடன் யோவான் என்றே நம்பப்படுகின்றது. யோவான் வசதியுள்ள ஒரு சீடனாகவும், இயேசுவுக்கு அன்பானவனாகவும் விளங்கியதோடு மாத்திரமல்லாமல் சீடர்களுக்குள் இவன் மாத்திரமே இயற்கை மரணத்தைத் தழுவிக் கொண்டவனாகவும் விளங்கினான். இயேசு தன் தாயை, அந்த அன்பான சீடனிடம் ஒப்புக்கொடுத்ததன் மூலமாகத் தந்தை யோசேப்பு முன்கூட்டியே இறந்துவிட்டார் என்பது உறுதியாகின்றது. இன்று எருசலேமுக்குச் சென்றால் யோவானுடைய பெரிய வீடும், அந்தப் பெரிய வீட்டின் மேல் பகுதியில் மரியாள் இறுதிவரை தங்கியிருந்த அறையும், அங்கேயே மரியாள் இயற்கை எய்தினாள் என்பதற்கு அடையாளமாக மரியாள் நித்திரை செய்கின்றது போன்ற ஒரு உருவச் சிலையையும் காணலாம்.

மரியாளுடைய முழுமையான வாழ்க்கை வரலாற்றைத் திருமறையிலே கண்டுகொள்ள முடியாது. ஆனாலும் நற்செய்தி நூல்களில் காணப்படும், குறிப்பிடப்பட்ட சம்பவங்களின் வழியாக ஏற்கனவே மரியாள் ஒரு முன்மாதிரியான குடும்பப்பெண் என்பதனையும் அவளில் காணப்பட்ட உன்னதமான பண்புகளையும் கண்டுகொள்ளலாம். அவற்றினைச் சுருக்கமாகப் பின்வருமாறு நோக்கலாம்.

**01. கடவுள் பயமுள்ள ஒரு பெண்**

“இதோ நான் ஆண்டவருக்கு அடிமை உமது வார்த்தையின் படியே எனக்கு ஆகக்கடவது” (லூக்கா 01:38)

**02. தாழ்மையுள்ள பெண்**

கடவுளுடைய குமாரனைப் பெற்றெடுக்கும் மாபெரும் பேறு கிடைத்த பின்னும் “நான் ஆண்டவருக்கு அடிமை என்று அர்ப்பணித்தவள்” (லூக்கா 01:38)

**03. வினாவுள்ள, விவேகமுள்ள பெண்**

“இது எப்படி ஆகும்? நான் புருஷனை அறியேனே?” (லூக்கா 01:34)

**04. தன் பிள்ளைகளிலே கரிசனையுள்ள ஒரு பெண்**

“இதோ! நானும் உன் தகப்பனும் உன்னை விசாரத்தோடே தேடினோமே?”(லூக்கா 02:48)

**05. ஞானமுள்ள பெண்**

“இந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என்று சிந்தித்துக் கொண்டிருந்தாள்.” (லூக்கா 01:29)

**06. யூத சமய முறைமைகளை அனுசரித்து வாழ்ந்த பெண்**

“8ம் நாளிலே விருத்தசேதனம் செய்யக்கொண்டு போகின்றனர். புறாக் குஞ்சுகளைப் பலியாகச் செலுத்தினார்கள்” (லூக்கா 02:21-24)

**07. பிள்ளைகளை ஆன்மீக வழியிலே வளர்த்த ஒரு பெண்**

“பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன் கொண்டு ஞானத்தினால் நிறைந்தது” (லூக்கா 02:40)

**08. துணிவும் புரிந்துணர்வும் உள்ள ஒரு பெண்**

“அவள் எழுந்து ,ரவிலே பிள்ளையுடனும் கணவனுடனும் எகிப்துக்குப் புறப்பட்டுப் போனாள்” (மத்தேயு 02:14)

**09. எளிமையான வாழ்வை வாழ்ந்த ஒரு பெண்**

“பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னணையிலே கிடத்தினாள்” (லூக்கா 02:12)

**10. உறவுகளை நேசித்து வாழ்ந்த ஒரு பெண்**

“சகரியாவின் வீட்டிற்குள் பிரவேசித்து எலிசபெத்தை வாழ்த்தினாள்” (லூக்கா 01:39, 40)

இயேசுவினுடைய சிலுவை மரணத்திலும் இறுதிவரை துணிவுடன் அருகிலிருந்தாள். மூன்றாம் நாள் அதிகாலையிலே இருட்டோடு எழுந்து நெருக்கமான சில பெண்களுடன் கல்லறைக்குச் சென்றாள். அது மாத்திரமல்லாமல் ஆதித் திருச்சபையின் ஆரம்ப வரலாற்றிலே அப்போஸ்தலர்களுடன் ஒருமித்திருந்து அப்பம் பிட்குதலிலும், உபவாசத்திலும், வேண்டுதலிலும் தரித்திருந்தாள். மரியாளுடைய வாழ்வு அனைத்துப் பெண்களுக்கும் முன்னுதாரணமான ஒரு அற்புதமான வாழ்வாக அமைந்து காணப்படுகின்றது.

இப்பத்திரிகையானது உடுவிலில் அமைந்துள்ள JR Printing Industries அச்சகத்தில் அச்சிடப்பட்டு,
24.07.2026 திகதி அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையினாரால் வெளியிடப்பட்டது.